காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

7—5—72

★

உள்ளே.....

அனைவருக்கும் பங்குண்டு (தலையங்கம்)

★

கைராட்டை காவேரி (1) (டாக்டர் அறிஞர் அண்ணா)

★

பாவேந்தரின் கதைத் தலைவியர்! (சிறப்புக் கட்டுரை)

★

நாய் வால் நிமிருமா? (சிறுகதை)

விலை 25 காசு

முதல்வர் கலைஞரிடம் தேசப் பாதுகாப்பு நிதியை கூட்டுறவுத்துறை பதிவாளர் பி. எம். பெல்லியப்பா அளிக்கிறார்.

வினா-விடை

இரா. செம்பியன், சேலம்

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கழகக் கருத்தை, மோகன் குமாரமங்கலம்கூட ஒப்புக்கொண்டிருக்கிறாரே, கவனித்தீர்களா?

உங்களூரில்தான் அப்படிப் பேசி இருக்கிறார். ஏனென்றால் இப்போது தனியாக இந்திரா காங்கிரசுக்கு என்று தொழில் அமைப்புக்கள் இல்லையல்லவா, அதனால்! இன்னும் வலிவாகக் கழகம், இதனை வலியுறுத்தத் தொடங்கும்போது, நாளைக்கு குமாரமங்கலமே, அது அடாது, கூடாது என்று குரல் கொடுப்பார் பாருங்களேன்!

து. நடராசன், நீத்தனமங்கலம்

அரிசனங்களுக்குக் கழக அரசு எதுவுமே செய்யவில்லை என்று காமராசர் பேசி இருப்பதுபற்றி என்ன சொல்கிறீர்கள்!

காமராசர் ஒரு பழுத்த காங்கிரஸ்காரர் ஐயா! நினைவிலும் கனவிலும் அவர் காங்கிரஸ், காங்கிரஸ் என்றே புலம்பிக் கொண்டிருக்கிறார். அந்த ஜன்னி வேகத்தில் காங்கிரஸ் என்று சொல்லவேண்டியவர் வாய் தவறி "கழகம்" என்று சொல்லி விட்டார் அவ்வளவுதான்! சொல்லை மாற்றிப் போட்டுப் பாருங்கள்; சரியான விடை கிடைக்கும்.

காங்கிரஸ் பேச்சாளர்கள் ஒவ்வொருவரும் இப்போது போராட்டம், போராட்டம் என்று பேசத் தொடங்கி இருக்கிறார்களே, ஏன்?

அவர்களது வயிறு நிரம்பப்பட வேண்டியிருக்கும் பாட்டுக்குத்தான் போராட்டம் என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள்—பயப்படாதீர்கள்!

வே. கமலநாதன், சென்னை.

கண்ணதாசன் மறுபடியும் "சிண்டிகேட்"டுக்குப் போய்விட்டாரா?

இல்லை, இல்லை; இரண்டு 'கேடு'களையும் இணைக்கும் பாலமாகி இருக்கிறாராம்!

கா. மருதவாணன், காரைக்கால்

மிஸ்டர் அப்போலோவை ஏன் இப்போது காண முடியவில்லை.

அப்போலோ 16-கூட பழுதடைந்துதானே தப்பி இருக்கிறது. இயந்திரம் எப்போது, எங்கே பழுதடையும் என்று எவரால் சொல்ல முடியும்? பழுது பார்க்கப்பட்டு சீரடைந்தவுடன் பயணம் தொடங்கக்கூடும்!

மு புகழேந்தி, காஞ்சிபுரம்

காழ்ப்பு — என்பது எங்கிருந்து பிறக்கிறது?

'எங்கிருந்து' என்று அல்ல; எதிலிருந்து' என்று கேட்டிருக்க வேண்டும். தனக்குக் கிடைக்காத ஒன்று இன்று இன்னொருவனுக்குக் கிடைக்கும் போது, அதைக் கண்டு குமுறும் மனம், பொருமைப் படுகிறது; இந்தப் பொருமையின் முதிர்ச்சியைத்தான் நான் 'காழ்ப்பு' என்று நம்புகிறேன்.

எல் நாராயணன், செங்கை

புகழ்பெற்ற பழம் பெரும் எழுத்தாளர்களிடமிருந்து எழுத்தோவியங்களைப் பெற்று, காஞ்சியில் பிரசுரிக்கக்கூடாதா?

அப்படிப் பட்டவர்கள் எல்லோருமே இப்போது எழுத்துத் தொழிலையே விட்டுவிட்டார்களாமே! ஏனென்றால் நேரம் இல்லையாமே!

ஆர். ஆர். இராமநாதன், சென்னை

பார்வை பழுதடைவது எப்போது?

"அகம்"பாவம், முதிர்ச்சியடையும்போது!

ஆணவத்துக்கு 'முற்றுப் புள்ளி' உண்டா?

'முற்றுப் புள்ளி' உண்டா என்பது ஆராய்ச்சிக் குரியது. 'எல்லை' உண்டா என்று கேட்டிருந்தால், காமராசரைப் பாருங்கள் என்பது பதிலாக இருந்திருக்கும்.

எம். எஸ். வைத்தியநாதன் அரக்கோணம்

நாம் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?

இதுவரையில் போய்க்கொண்டிருந்த இடத்துக்குத்தான்-என்று கூறவேண்டுமென விரும்புகிறீர்களா?

எஸ். சம்பந்தம், பேரளம்

இராகம், தாளம், பல்லவி—விளக்குவீர்களா?

காமராசர் — நவசக்தி — நாத்திகம்; புரிகிறதா?

வாழ்க்கைக்கு வரம்பு முக்கியமா?

வாழ்க்கைக்கு முக்கியமோ இல்லையோ நாக்குக்கு வரம்பு முக்கியம் என்று மட்டும் தெரிகிறது.

புலவர் வைாவநாதன், சிவகெங்கை

'காஞ்சி' என்ற சொல்லுக்கு 'அரை முடி' என்ற பொருளும் உண்டல்லவா?

ஆமாம்; அத்துடன் வெற்றி மாலை என்ற பொருளும் உண்டு. உங்கள் பார்வை கீழே பதிவதை விட, மேலே ஏறுவது சிறப்பல்லவா!

முன்பெல்லாம், இலக்கணம், இலக்கியம் தொடர்பான வினாக்களுக்கு விடையளித்து வந்தது போல, இப்போது விடையளிப்பது இல்லையே-ஏன்?

இலக்கியத்துக்குத்தான் இலக்கணம்; வினாக்களுக்குத்தானே விடை!

எம். கே. புஷ்பநாதன், வேளாங்கண்ணி

பெரியார் ஈ. வெ ரா. அவர்களது பணி, இந்த நாட்டுக்குப் பயன் படுமா? பயன்பட்டிருக்கிறதா?

நீங்கள் எந்த உலகத்திலிருக்கிறீர்கள்; பெரியார் அவர்களது பணியின் பயன்தானே இப்போதைய கழக அரசு! கழகமும் அந்தப்பாதையில் கொஞ்சம் பாதம் பதித்தால், பயன் விரைவாக—பரவலாகக் கிடைக்குமே! *



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 7—5—72 | இதழ் 43

அனைவருக்கும் பங்குண்டு

இதுவரையில் இருந்ததைவிட, இந்த ஆண்டு மே நாள் விழா மிகமிகச் சிறப்புடையது; சிறப்படைந்திருக்கிறது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியதாகும்.

சென்ற ஆண்டில், தமிழ் நாட்டில் மட்டும், இந்த விழாவெடுத்து மகிழ்ச்சிப் பெருங்கடலில் நீந்தி, மகிழ்வை மாந்திக் களிக்கவேண்டிய தொழிலாளர், பாட்டாளிப் பெருமக்கள், மிகவும் அதிகமான அளவுக்கு அலைக்கழிக்கப்பட்டார்கள் என்பதை, நாடு பசுமையாக நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறது.

அவ்வாறு அலைக்கழிக்கப்பட்டதன் காரணம் பற்றி நாம் அலசி ஆராயப்போவதில்லை. ஆனாலும், தொழிலாளர் பெருமக்கள், வருங்காலத்திலும் அவ்வாறான அலைக்கழிப்புகளுக்கு—அல்லல்களுக்கு ஆட்படக்கூடாது என்று எண்ணிப்பார்க்க வேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்த வேண்டுவது நமது கடமை என்றே கருதுகிறோம்!

மே-நாளின் பிறப்பே, கணக்குப் பார்க்கத் தொடங்கியதனால் ஏற்பட்டது என்பது வரலாறு. எனவேதான், தொழிலாளர் பெருமக்கள் அரசியல் குட்டையில் மூழ்கி அல்லலுறுவதுபற்றி, மறு கணிப்புச் செய்யவேண்டுவது அவசியமாகிறது என்றறிவிக்கவேண்டிய எண்ணம் நமக்கு ஏற்படுகிறது.

வளர்ச்சியடைந்துவரும் ஒரு நாட்டின் முதுகெலும்பாக தொழில் துறையும், அந்தத் துறையின் ஆணிவேராகத் தொழிலாளர் பெருமக்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக, உலகம் எவ்வளவோ மாற்றங்களை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி இருக்கின்ற காலம் இது.

இதைப் போலவே, நாட்டின் தொழில் துறையும், கால மாறுபாடுகளைக் கருத்தில் கொண்டு, தன்னகத்தே புதிய கோட்பாடுகளை, கொள்கைகளை ஏற்றுச் சிறக்க மறுக்கக்கூடாது.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கோட்பாடு குறித்துத் தலைவர்கள் கருத்தொற்றுமை பெற முடியாது போவார்களானால், அத்தலைவர்களைக் கருத்தொற்றுமை வட்டத்துக்குள் கொண்டுவந்து நிறுத்தும் பேராண்மை, தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றுபட்ட சக்திக்கு நிச்சயம் உண்டு.

இந்த ஒன்றுபட்ட சக்தியானது, ஆக்கத்துக்குப் பயன்படுவதாக இருக்கவேண்டுமே ஒழிய, அழிவுக்குப் பயன்படுத்தப்படுவதற்கு அமைந்துவிடக் கூடாது என்பதுபற்றி, தலைவர்கள் சிந்திக்காமல் போனாலும், தொழிலாளர் தோழர்கள் கட்டாயம் சிந்தித்தே தீரவேண்டும்.

நாட்டின் அறிவாளர்கள் அனைவரும், தத்தம் அறிவின் விசாலத் தன்மையைக் காட்டிக்கொள்ளக் கருதித் திட்டித் தருகின்ற திட்டங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கோணத்திலிருந்து, மற்றவர்களால் அது தீயது என்று விமர்சிக்க முடிந்தவைகளேயாகும்.

துரதிருஷ்டவசமாக நாட்டின் அரசியல் விமர்சனங்கள் முழுதாக, சுயநலத்தன்மை கொண்டதாக மாறிவிட்டிருக்கின்றன.

போலித்தனமான இந்த நிலையை, தொழிலாளர் பெருமக்கள் ஆர அமர சிந்தித்து சரியான வழியில் தடம் பதித்துக்கொள்ள முனையவேண்டும்.

தலைமை ஏற்பது என்பது இன்றைக்கு மலிவாகிப் போய் இருக்கிறது. தகுதி பெற்றிருப்பது சுருகிக் கொண்டிருக்கிறது.

தவறான தலைமை காரணமாக, தலைவர்களைக் காட்டிலும், தொழிலாளர்களே மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதால் விழிப்புடனிருக்க வேண்டியவர்களும் தொழிலாளர்களேதான்.

ஈடுபட்டிருக்கும் தொழிலில் காண்கின்ற இலாப நட்டக் கணக்கைப் போலவே, சார்ந்திருக்கும் சங்க அமைப்பின் தலைமைபற்றிய லாபநட்டக் கணிப்பும் கூட இன்றைக்குத் தொழிலாளர் சமூகத்துக்கு இன்றி அமையாத ஒன்றாகும்.

வாழ்க்கை என்பது தேவைகளின் திரளால் பிணிக்கப்பட்டுவிட்டிருக்கிறது. அந்தத் தேவைகள் நாளுக்கு நாள், வேளைக்கு வேளை மாறுபாடடைந்து கொண்டுமிருக்கின்றன.

எனவே, இந்த நிலையில் தொழிலாளர் பெருமக்களும், நாட்டின் பொதுத் தேவைகள்பற்றியும், மாறுபாடுகள் பற்றியும் மனம் மாற்றிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் பொறுப்பு, நமக்கு உண்டு.

மனமாற்றம் என்பது தொழிலாளரிடையே மட்டும் நடைபெறவேண்டிய ஒன்றாகஇன்றைக்கு இல்லை.

மூலதனம் ஒன்றையே தகுதியாகக் கொண்டிருக்கும் முதலாளிகளும்கூட, காலத்தின் தேவைக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள்.

வாய் மலிவாகக் கடமைகளைப் பற்றியோ, உரிமைகளைப் பற்றியோ முழக்கங்கள் எழுப்பிவிடுவது மட்டுமே அந்தப் பிரச்னைகள் தீர்ந்துவிடப் போதுமானவை அல்ல. எந்த ஒன்றுக்குமே நோய் நாடி, அதன் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாட வேண்டும்.

இன்றைக்குப் பொதுவாக, குழப்பங்கள் ஏற்படுவதற்குக் காரணங்களைத் தேடியலைந்து கொண்டிருக்கத் தேவையற்ற நிலையே இருந்துகொண்டிருக்கிறது. அவை வெளிப்படையாகவே தெரிந்துகொண்டிருக்கிற காரணத்தால்!

ஒன்றுபட்ட சக்தியை ஆக்கத்துக்குப் பயன்படுத்தத் தவறி இருப்பதுதான் அந்தக் காரணம் என்பதை அனைவருமே அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனாலும் குழப்பங்கள் மலிந்துகொண்டேதான் போகின்றன.

சென்ற கிழமை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுத்துக்காட்டி இருப்பதுபோல, அனைவரிடத்திலும் ஒரு நாகரிகப் பண்பாட்டு அரசியல்தன்மை துளிர்விட்டாகவேண்டும்.

டாக்டர் கலைஞர் வித்தூன்றி இருக்கிறார். நீர் ஊற்றிப் பாதுகாத்து வளர்த்துக் கொடுப்பதில் அனைத்துக் கட்சியினருக்குமே பங்குண்டு.

அந்தப் பங்கினை நினைவூட்ட, செயல்படுத்த இந்த ஆண்டு மே நாள் விழாக்கள் பயன்படுமானால், அது அகிலத்துக்கே ஒரு வெற்றியாக அமையும்.

— திருவாரூர் முத்துராமன்.

நாய் வால் நிமிருமா?

(ஜே. வி. நாதன்)

1. குட்டி எழுத்தாளர் புட்டிக் கவிஞர்!

எழுத்தாளர் 'ஜில் ஜில்'லைத் தெரியாது என்கிறீர்களே சார், நீங்கள் சரியான அப்பாவிதான் போங்கள்!

சினிமாவில் சில 'அப்பீல்'களைக் காட்டக் கூடாது என்று தடை செய்ய கத்தரிக்கோல் கமிட்டி வைத்திருக்கிறார்களாமே, அப்படி ஒன்று எழுத்துக்கு இல்லாத காரணமோ—அல்லது தப்பித் தவறி இருந்தாலும் அவரை மட்டும் அவிழ்த்து விட்டு விட்ட காரணமோ தெரியாது—ஜில் ஜில் எழுதுகிறார் என்றால் அதில் சில பேரைப் போல் ஒளிவு மறைவு, மழுப்பல் எதுவும் இராது. அவர் எப்போதும் பச்சை மசியைத்தான் உபயோகிப்பார். அதனால்தானோ என்னவோ ஜில் ஜில் லுடைய எழுத்துக்களும் 'பச்சை பச்சை'யாய்—நல்லவர்கள் படிக்கக் கூசும்படி—இருக்கும்.

அவருடைய 'பச்சை' எழுத்துக்களைப் படிக்க வாசகர்களும் இருந்தனர். அந்த வாசகர்கள் 'ஜில் ஜில்'லின் புத்தகங்களை வேதப் புத்தகமாக மதித்து எப்போதும் தலையணைக்கடியிலேயே வைத்துக் கொள்வதும் வழக்கமாம்! "ஜில் ஜில்" எழுதும் 'பருவக் கிறுக்கு'—தொடர்கதை! உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!' என்று வண்ணவிளம்பரம் செய்து-ஜில்ஜில்'லின் எழுத்துக்களை போட்டி போட்டுக் கொண்டு பிரசுரித்த பத்திரிகைகளும் ஒன்றிரண்டு இருக்கவே செய்தன. இலக்கியப் பத்திரிகை என்று மகுடம் சூட்டிக்கொண்டு சினிமாச் செய்திகள், கவர்ச்சிப் படங்கள், நடிகை எழுதும்(?) சிறுகதை. புது முகங்களின் பேட்டி, இவற்றுடன் 'ஜில் ஜில்'லின் 'சுவை'த் தொடர் கதை—இப்படியாக லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்பட்ட 'வியாபாரப் பத்திரிகை'களில் 'ஜில்ஜில்' ஒருவராலும் அசைக்க முடியாதபடி இடம் பெற்றிருந்தார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

இரவு பகலாக உணவு இன்றி, உறக்கம் இன்றி தன் இரத்தத்தையே எழுத்துக்களாக்கி பிரசுரகர்த்தரைத் தேடிச் சென்றார் எழுத்தாளர் தணிகாசலம். உண்மையிலேயே சிறந்த இலக்கிய கர்த்தா அவர். "இலக்கிய உலகிலேயே என் படைப்பு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. என் இரண்டு வருட உழைப்பு இது" என்று பெருமிதத்துடன் காகிதக் கற்றைகளை நீட்டினார், பிரசுரகர்த்தர் கண்ணாயிரத்திடம்.

"என்ன சார். எல்லாரும் அப்பிடியே சொல்லிகிட்டிருக்கீங்க, ஆனா ஒங்க எழுத்திலே ஒரு வேகம் புதுமை, டர்னிங், அட்ரார்க்ஷன் எதுவும் இல்லையே!..."

'வேகம் — புதுமை —டர்னிங்— அட்ராக்ஷன்!'-எழுத்தாளர் தணிகாசலத்துக்கு விழி பிதுங்கியது. ஆத்திரத்தால் உடல்படபடத்தது.

"என்கிட்டே கோபப்பட்டு இன்னா சார் பெரயோசனம்? இங்கே பாத்தீங்களா?...இவ்வளவும் இன்னிக்கு வந்த தபாலுங்க. ஜில் ஜில்லோ — புஸ்தகங்கள் — 'சென்னைக்கு வா!', — 'காதல் சொர்க்கம்',—'கண்ணே ஓடி வா!' 'காதல் செய்யத் தெரியாதா?...' — இவ்வளவு புஸ்தகங்களையும் மூணு பதிப்பு போட்டேன். அம்புட்டும் தீர்ந்து போச்சு. இங்கே என்னடான்னா புஸ்தகங்களை அனுப்பச் சொல்லி செக்கும், மணியார்டருமா வந்து குவியுது. எழுதினா 'ஜில் ஜில்' மாதிரியில்ல எழுதணும் — கோவிச்சுக்காதீங்க சார், இன்னிக்கு படிக்கறவங்களுக்குப் புடிக்கற மாதிரி எழுதினாத்தான் புஸ்தவம் விக்குது!..."

சிறுகதை!

கண்ணாயிரத்தின் வியாபாரப் பேச்சைக் கேட்டு வயிறெரிந்தபடி எழுத்தாளர் தணிகாசலம் திரும்பிவிட்டார். 'எனக்கு காதல் செய்வதற்கு வழி சொல்லிக் கதைகள் எழுதத் தெரியாது. அப்படி எழுதி பங்களா வாசம் பண்ணுவதைக் காட்டிலும், குடிசையிலே என் மனைவியும் குழந்தைகளும் முழுப் பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை—' என்று வைராக்கியத்துடன் கூறிக்கொண்டு நடந்தார் அவர்.

"பிழைக்கத் தெரியாத மனுசன்!" என்று முனகிக் கொண்டே தன் வேலையில் ஈடுபட்டார் பிரசுரகர்த்தரும் பிழைக்கத் தெரிந்தவருமான திருவாளர் கண்ணாயிரம்.

* * *

அடடா! எங்கேயோ ஆரம்பித்து எதையெதையோ கொண்டு வந்து உங்களை போரடித்துவிட்டேனே! கண்ணாயிரமும், எழுத்தாளர் தணிகாசலமும் எக்கேடோ கெட்டுப் போகட்டும். நாம் நமது முற்போக்கு எழுத்தாளரும், புதுமைப் படைப்பாளருமான மதிப்பிற்குரிய ஜில்ஜில் அவர்களைச் சற்று நெருங்கிக் கவனிப்போம்!

* * *

அர்த்தராத்திரி நேரம். இரண்டாவது காட்சி பார்த்துவிட்டு 'பியூக்' காரில் பவனிவந்து கொண்டிருந்தார் ஜில் ஜில். அவர் பக்கத்தில் 'எதுக்காகச் சிரிச்சாள்?' படத்தில் கதாநாயகியாக நடித்த ஒரு புதுமுகம் ஜில் ஜில்லின் கழுத்தில் கையைப் போட்டு வளைத்து அவரோடு ஒட்டி உட்கார்ந்திருந்தது. அந்த சுகத்துடனேயே காரை மெல்லச் செலுத்திக்கொண்டிருந்தார் புதுமைப் படைப்பாளர் ஜில் ஜில்.

அவர் பதினைந்தாவது தடவையாக அந்தப் படத்தைப் பார்க்கிறார். 'பாரீஸ் பை நைட்'. "எத்தனை தடவை பார்த்தாலும் அலுக்கவா செய்கிறது......? என்ன இருந்தாலும் ஃபாரின் பிக்சர்'ஸே பிரமாதமாகத்தானிருக்கும்!" அவர் சிரித்துக் கொண்டார். 'நானே கதை எழுதி எடுத்த படம்தான் 'எதுக்காகச் சிரிச்சாள்? அது நல்லாத்தான் ஓடிச்சு. ஆனா வசூல் இல்லை-வசூல் இல்லாட்டா என்ன?...... ஐ டோண்ட் கேர்!......'

(அடுத்த இதழில் முடியும்.)

காஞ்சீபுரம்

தம்பி !

கைராட்டை காவேரி (1)

மங்கியதோர் நிலவினிலே, வெண் மணலில் அமர்ந்துகொண்டு, கொந்தளித்
துக்கொண்டிருந்த கடலை ஒரு அலட்சியப் புன்னகையுடன் நோக்கினான்
—கைராட்டை காவேரி. காவேரி என்ற :பெயர், வழக்கமாக பெண்களுக்குத்
தான் வைப்பார்கள். என்றாலும், தமக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு
பிறந்த குழந்தைக்குச், செல்லமாக இந்தப்பெயரிட்டு வளர்த்தனர், பெற்
றோர். கைராட்டை என்ற அடைமொழியைக் காவேரி, கடினமான உழைப்
பிற்குப் பிறகு பெற்றான். கைராட்டை காவேரி தூய உள்ளம் கொண்ட காங்
கிரஸ் தொண்டன். தூய உள்ளம் கொண்ட தொண்டன் என்று நான் கூறியதி
லிருந்தும், துங்கலைக் கண்டு மகிழாமல், கடலின் கொந்தளிப்பைப் பார்த்தவண்ணம்
இருந்தான் என்று குறிப்பிட்டதிலிருந்தும், கைராட்டை காவேரி, தனியாகத்தான்
உட்கார்ந்திருந்தான், என்பதைத் தெரிந்துகொண்டிருப்பாய்.

காங்கிரஸ் கட்சி, நாட்டு விடுதலைக்கான போர்ப்பரணி எழுப்பிக் கொண்டிருந்த
நாட்களில், காவேரி, தன்னுடைய நலன், எதிர்காலம், என்பதை குறித்துத் துளியும்
எண்ணிப் பார்க்கமுடியுமா! தேசிய ஆர்வத்தால் ஈர்க்கப்பட்டுக், காங்கிரஸ் தொண்
டாற்றக் கிளம்பி, தொல்லைகளைத் தாங்கிக் கொண்டான்; தூய உள்ளத்தோடு பணி
யாற்றினான்; சுற்று வட்டாரத்தில் இருந்தோர், சுற்றத்தார், காவேரியைத் துவக்கத்
திலே ஏளனம் செய்து பார்த்தனர்; பிறகோ அவனுடைய அறிவாற்றலைப் பாராட்
டினர்; அளவளாவினர்; அவனை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டுமென்று மற்ற
வர்க்கு அறிவுரைகூடக் கூறினர்.

ஊழலோ ஊழல் என்று மூலைக்கு மூலை
ஒப்பாரிப் பாடிக்கொண்டிருக்கும் காங்
கிரசார், அன்றைக்கு எவ்வளவு பெரிய
ஊழல்களுக்கெல்லாம் சொந்தக்காரர்க
ளாக இருந்தார்கள் என்பதனை 2-4-'61
இல் வெளிவந்த இந்த மடலைப் படித்தால்
தானே புரியும்.

காவேரி, மற்றப் பணிகள் எல்லாவற்றையும்
விடக் கைராட்டையை அனைவரும், புனிதப் பொரு
ளாகக் கருதவேண்டும், கதர் அணிவது தர்மம்
என்று உறுதி கொள்ள வேண்டும், என்று
எடுத்துக் கூறித், தன் வட்டார முழுவதிலும்
கைராட்டையைப் பரப்பும் பணியினை மிகத் திறம்
பட, அதிக ஆர்வத்தோடு செய்து வந்ததன்
காரணமாகத்தான், கைராட்டை காவேரி
என்ற பெயர் கிடைத்தது. கடற்
கரை மணலிலே அமர்ந்திருந்தபோது
அவன் மனம், அந்தப் பழைய நாட்
களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சி
களின்மீது பாய்ந்து சென்றது: உள்
ளத்தில் அடி வாரத்தில் இருந்த

நினைவுகள் துள்ளித்துள்ளி வெளிப்புறம் வருவதும், மீண்டும், அடிவாரம் செல்வதுமான நிலைமை—மனக் கடலிலே, கொந்தளிப்பு. அவன் கைராட்டை காவேரியானபோது, கோட்டையிலே, அவன் விரும்பிய கொடி பறக்கவில்லை! இப்போது பறந்து கொண்டிருந்தது—பாவாணர் கூறினாரல்லவா, பட்டொளி வீசிப் பறந்திடக் காணீர் என்று, அதுபோல.

அதைக்கண்டு, அவன் மனதில் மகிழ்ச்சி அல்லவா பொங்கி இருக்கவேண்டும்—எண்ணம் ஈடேறிவிட்டது — விடுதலை கிடைத்துவிட்டது — புது வாழ்வு பிறந்துவிட்டது—பொற்காலம் ஆரம்பமாகிவிட்டது—புனிதப் போரில் வெற்றி கண்டாகிவிட்டது—என்றெல்லாமல்லவா, எண்ணிக் களிப்படைந்திருக்க வேண்டும், என்று கேட்கிறாய். அப்படித்தான் கேட்கத் தோன்றும். பலர் காவேரியை அப்படித்தான் கேட்கிறார்கள். ஆனால் கைராட்டை காவேரியின் மனதில் கோபம், ஏமாற்றம், திகைப்பு, துக்கம், வெட்கம், என்பவைகள்தான், கொந்தளித்துக்கொண்டிருந்தன—கடலில் முத்து இருக்கத்தான் செய்கிறது, ஆனால் எல்லா இடத்திலுமா!—இல்லையல்லவா—சுறுவும், அதற்கு இரையாகும் வேறு மீனினமும், பாம்பும், வேறுபல நச்சுப் பூச்சிகளும், நிரம்ப இருக்கின்றன. காவேரி, இதைக்கூட எண்ணிப்பார்த்தான்—முத்து எடுக்க மூச்சடக்கிக், கத்தும் கடலடி சென்றவன், கரத்தில் சிக்கியது சிப்பி என்றெண்ணி எடுத்து வந்து உடைத்துப் பார்க்கும்போது, முத்து இருக்கவேண்டிய இடத்திலிருந்து, சிறியதோர் நாகம் சீறிக் கிளம்பிடக் கண்டால், எப்படி இருக்கும் நிலைமை என்று எண்ணினான்—ஓவென்று உரக்கச் சிரிக்கலாம்போலத் தோன்றிற்று; அடக்கிக்கொண்டான்; அங்கு வேறு பலர், வெவ்வேறு நிலையில், சிரிப்பொலி கிளம்பியபடி இருந்தனர்; அவர்கள் அறிவார்களா, இவன் மனக் கொந்தளிப்பை!

"ஐயா! சூடா பட்டாணி, கடலை, வேர்க்கடலை!"—என்று சேதி கூறும் முறையிலே, குரலெழுப்பியபடி கூடைக்காரன் வந்தான்; காவேரி வேண்டுமென்றும் சொல்லவில்லை, வேண்டாமென்றும் கூறவில்லை; அவனால் வேறு முக்கியமான விஷயங்களிலேயே, வேண்டும்! அல்லது வேண்டாம்!—என்று கூறமுடியவில்லையே, பாபம். கூடைக்காரன், காவேரி எதிரே, உட்கார்ந்தான், குத்துக்காலிட்டபடி. அந்த மணற் பரப்பில், நடந்து நடந்து அலுத்துப்போனவன்—ஆகவே இளைப்பாறிக் கொள்ளலாம் என்ற நினைப்பு. உட்கார்ந்தவன், காவேரியின் முகத்தைப் பார்த்ததும், அடையாளம் கண்டுபிடித்துவிட்டான், "நீங்களா! கைராட்டை காவேரி அண்ணன்தானே! அண்ணேன், எப்படி இருக்கறீங்க.........உங்களுக்கு என்ன அண்ணேன், குறை! உங்க இராஜ்யம்தானே இப்ப நடக்குது......இப்பத்தான், உங்க மனம் குளிர்ந்திருக்கும்; கொடி பறக்குதே கோட்டையிலே!"—என்று கேலியாக அல்ல, கள்ளங் கபடமற்ற முறையிலே, பேசினான் கூடைக்காரன். கைராட்டை காவேரி, தலையைக் கவிழ்த்துக்கொண்டான். காரணம் புரியவில்லை, கூடைக்காரனுக்கு.

"அண்ணேன்! முன்னே மாதிரிதானே, கைராட்டினமும் கையுமா இருக்கறீங்க. முன்னேயெல்லாம் உங்க பேச்சைக் கேட்காதவங்ளெல்லாங்கூட இப்ப, கைராட்டினம் சுத்துவாங்களே...உங்க இராஜாங்கம்தானே நடக்குது" என்று கூடைக்காரன் பேசிக்கொண்டே போனான். அந்தப் பேச்சு, காவேரிக்கு மெத்த வேதனையாக இருந்தது. ஏனென்றால், அன்று காலைப் பத்திரிகையிலேதான், மிகப் பெரிய காங்கிரஸ் தலைவர், தான் இப்போது, கைராட்டை சுற்றுவதில்லை என்று தெரிவித்தது போடப்பட்டிருந்தது. அதைப் படிக்கும்போதே, கைராட்டை காவேரிக்குக் கோபம் கோபமாக வந்தது; பாவி மனுஷன் இப்படி மானத்தை வாங்குகிறானே! சுற்றாவிட்டால்கூடப் போகிறது, இதை நாலுபேருக்குத் தெரிகிறபடி பேசித் தொலைக்கத்தான் வேண்டுமா?" என்று எண்ணிக் கொதித்தான். ஆனால், மறுகணம் கோபம் மாறிவிட்டது. "இந்த ஆசாமி, பெரிய மனிதன். குற்றத்தை ஒப்புக்கொண்டு பேசுகிறான். மற்றவர்கள் இதைக்கூடச் செய்வதில்லையே! இன்னமும் ஊரை ஏமாற்றிக்கொண்டல்லவா இருக்கிறார்கள். அவர்களை விட இந்த ஆசாமி எவ்வளவோ மேல் என்று எண்ணிக்கொண்டான். கூடைக்காரனிடம் வேறு விதமாகப் பேச்சைத் திருப்பிவிட்டாலொழியத் தன்னுடைய வேதனையை அதிகமாக்கும் விதமாகத்தான் அவன் எதையாவது பேசிக்கொண்டிருப்பான் என்ற எண்ணத்தில். காவேரி, கூடைக்காரனைப் பார்த்து, "ஆமாமப்பா! நீ, ஏன் கிராமத்தைவிட்டு, இங்கு வந்து சேர்ந்தே, கெட்டவன் பட்டணம் போவான் என்பார்களே. ஊரோடு உற்றார் உறவினரோடு, காடு கரம்பைக் கவனித்துக்கொண்டு, குழந்தைகுட்டிகளைப் பார்த்துக்கொண்டு, நிம்மதியாக இருப்பதை விட்டுவிட்டு, இப்படி, பட்டணத்துக்கு வந்து, கூடை சுமந்துகொண்டு, கூவிப் பிழைக்க வந்துவிட்டாயே, ஏன்?" என்று கேட்டான் காவேரி.

"என்னைக் கேக்கறியே அண்ணேன், உங்க இராஜாங்கத்தை நடத்துகிறவங்களையல்லவா கேட்கவேணும்" என்று ஒரு போடு போட்டான், கூடைக்காரன். காவேரி, இரண்டொரு நாட்களுக்குமுன்புதான் படித்தான், சட்டசபையிலே காங்கிரஸ் அமைச்சர், கிராமத்து மக்கள் நகரத்துக்குச் சென்றுவிடுவது, வளர்ச்சிக்கு அறிகுறி—பொருளாதார முன்னேற்றுக்கு அடையாளம்" என்று பேசியதை. அமைச்சர் பேசியது, சரியானதுதான் என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தால், கிராமத்தை விட்டு நகரத்துக்கு ஏன் வந்தாய் என்று கூடைக்காரனைக் காவேரி கேட்டிருக்க முடியாதல்லவா? நல்லவேளை, நம்முடைய அமைச்சர் பேசியது, இவனுக்குத் தெரிந்திருக்காது. இவன் எங்கே சட்டசபை நடவடிக்கைகளைப் படித்திருக்கப் போகிறான் என்று எண்ணிக்கொண்டான் காவேரி.

இருப்பிடம் கிராமமோ நகரமோ, இடம் அல்ல முக்கியம்; முன்பு இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும், வாழ்க்கையிலேமுன்னேற்றம், தொழிலிலே முன்னேற்றம். நிம்மதி, வளர்ச்சி, ஏற்பட்டிருக்கிறதா என்பதல்லவா முக்கியம். மாந்தோப்பாக இருந்தாலென்ன புளியந்தோப்பாக இருந்தாலென்ன, காலா காலத்திலே காய்த்து, காய்த்தது நல்லவிலைக்கு விற்றுக் காசு கிடைத்து, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தினால் போதும் என்றுதானே எவரும் எண்ணுவார்கள். கூடைக்காரன், [illegible] வெட்டியும் கையுமாகத் திரிந்து, மடைதிருத்தி கிராமத்திலே இருந்தபோது, கிடைத்த வாழ்க்கை நிம்மதியைக் காட்டிலும், பட்டணத்திலே பிழைக்க வந்ததால், சிறப்பான வாழ்க்கையா, கிடைத்தது? அதுதானே இல்லை! இடம் மாறினான், இடர் மாறவில்லையே! தொழிலை மாற்றிக்கொண்டான், தொல்லை குறையக் காணோம்!

கைராட்டை காவேரிக்கு இது நன்றாகப் புரிகிறது; புரிவதால் அமைச்சர், இதைப்போய், வளர்ச்

சியின் அறிகுறி என்கிருரே, எவ்வளவு......! என்று எண்ணுகிறன்; என்ன கடினமான வார்த்தை பொருத்தமாக இருக்குமென்று எண்ணிப் பார்த்துப் பார்த்து. மனதிற்குள்ளாகவே குமுறிக்கொள்கிறன்.

* * *

"அண்ணு! அதெல்லாம் இருக்கட்டும். இதை எல்லாம் உனக்கு யார் சொன்னது!" என்றுதானே, தம்பி, கேட்கத் தோன்றுகிறது. உனக்கு அந்த ஐயப் பாடு ஏற்படும் என்று எனக்குத் தெரியும். இருவருமே தான் சொன்னுர்கள்.

* * *

"என்ன செய்தாலும், இந்த ஜனங்களுக்குத் திருப்தியே ஏற்படுவதில்லே. குறைகூறிக் கொண் டிருப்பதே வேலே. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா, வெள்ளேக்காரன் காலத்திலே, இங்கே, ஏற்பட்டுவிட்ட கேடுபாடுகளேப் போக்க, இழிவுகளேத் துடைக்க, பஞ்சத்தை நீக்க, எவ்வளவோ கஷ்டப்பட்டு வேலே செய்து கொண்டிருக்கிறுர்கள். உடனே தீர்ந்துவிடக்கூடிய காரியமா இது. என்னய்யா சுயராஜ்யம்! சுகம் எங்கே? என்றுதானே கேட்க வேண்டி யிருக்கிறது, என்று பேசுகிறுர்களே, கொஞ் சம்கூடப் பொறுப்பு இல்லாமல்" — என்று கைராட்டை காவேரி, சிறிதளவு கோபத்தோடு, பேசிக்கொண்டிருந்தான், என் நண்பன் 'நவபாரதி' யிடம், தம்பி! நவபாரதியை உனக்கு அறிமுகப் படுத்தவில்லேயே, 'நவபாரதி' என்பது, பெற்ருேர் இட்ட பெயரல்ல; அவர்கள் பாபம், அதெல்லாம் தெரியாதவர்கள், இராமா கிருஷ்ணு கோவிந்தா, என்று காலந் தள்ளி வந்தவர்கள்; எனவே அவர்கள் நரசிம்மன் என்றுதான் பெயரிட்டார்கள்; ஆனல், நரசிம்மன், காவேரி போலவே, காங்கிரஸ் தொண் டாற்றக் கிளம்பி, 'நவபாரதி' என்று பெயரெடுத்துக் கொண்டான். காகிதம் கிடைத்தாலும், நல்ல சுவர் கிடைத்தாலும், காங்கிரசைப் பற்றி எதையாவது எழுதுவான், அடியில், இப்படிக்கு 'நவபாரதி' என்று கையெழுத்து இருக்கும்.

பிகார் பூகம்பம் ஏற்படக் காரணம் என்ன?
பிரிட்டிஷ் ஆட்சியால் பூமாதேவி குலுங்கிக் குலுங்கி அழுதாள்! அதுதான் காரணம்!!

இப்படிக்கு,
நவபாரதி.

தம்பி! இப்படி எதையாவது எழுதியபடி இருப்பான். போலீசார் வெள்ளே அடித்து மறைப்பார்கள்; இவன் வேறு இடத்தில் எழுதுவான்; பிறகு இதிலே படிப் படியாக முன்னேறிக் கையெழுத்துப் பத்திரிகை நடத்தி, பிறகு அச்சிட்டு வழங்கி, பிறகு அச்சகமே வைத்து, பிறகு அது பறிமுதலாகி, பிறகு அதற்காகப் பொதுமக்கள் நிதி திரட்டிக் கொடுத்து, பிறகு அதை வைத்துப் பெரிய அளவில் பத்திரிகை நடத்தி, இப்போது. சர்க்காரின் சாதனேகளேத் தெரிவிக்கும், வெளியீடுகளே, அச்சிட்டுப் புகழ் (பொருள்) ஈட்டி வாழ்ந்து வருகிறுர், நவபாரதி. அவரிடம் பேசும் போது காவேரிக்கு, ஆர்வமும், துணிவும் இயற்கை யாகவே அதிகமாகத்தானே ஏற்படும். தனக்குத் தகுந்த பக்கபலம் கிடைத்தது என்ற எண்ணத்தில், பேசலானன். மேலும், நான் இருக்கிறேனல்லவா— என்னேக் குத்திக் கிளறி வேடிக்கை பார்க்கலாம் என்ற நோக்கம் வேறு. நான், அன்று அங்கு இல்லா விட்டால், நவபாரதி, வேறுவிதமாகக், காவேரியுடன் கூடிக்கொண்டு பேசியிருப்பானே என்னவோ, நான் இருந்துவிட்டதால், நவபாரதி காவேரியுடன், வாதாட வேண்டித்தான் ஏற்பட்டுவிட்டது; ஏனெ னில் நவபாரதி, என்னிடம் பலமுறை சுயராஜ்ய ஆட்சி சரியாக நடைபெறவில்லே என்று ஒப்புக் கொண்டு பேசியவன்!!

"காவேரி! மக்கள் குறை கூறுவது இருக்கட்டும். நம்முடைய காங்கிரஸ் ஆட்சியை மற்றவர்கள், அதிலும் அண்ணுதுரை போன்றவர்கள், குறைகூறிப் பேசும்போது, காங்கிரசுக்காகப் பாடுபட்ட நமக்குக் கோபம் வரத்தான் செய்யும். ஆனல், நமக்கே, உள்ள படி, காங்கிரஸ் ஆட்சியில், திருப்தி ஏற்பட்டிருக் கிறதா? நாம், எதிர்பார்த்தபடி, திட்டமிட்டபடி, மக்களிடம் வாக்குறுதி அளித்தபடியாகவா, ஆட்சி நடக்கிறது?" என்று நவபாரதி கேட்டான். அவன் பேச்சு, அழுத்தந் திருத்தமாக இருந்தது. தம்பி! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது; ஏனெனில், நவ பாரதியின் புதிய வெளியீட்டில், காங்கிரஸ் ஆட்சி யின் சாதனேகளே அவ்வளவு அதிகமாகப் பாராட்டிக் கதிரவன் ஒளி காணுதார், கானம் கேட்டு இன்புரு தார், காங்கிரஸ் ஆட்சியின் சாதனேயை உணரா தார், மூவரும், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளேகள்! தாயல்ல அவள்—பேய்! பெரும் பேய்! பிரிட்டிஷார் விட்டுச் சென்ற பேய்!!—என்று நவபாரதி எழுதி யிருந்தான்.

அவன்தான் காவேரியைக் கேட்கிறுன், எதிர் பார்த்தபடியாகவா காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது, என்று; என் எதிரில்!

காவேரிக்குக் கடுங்கோபம்; "நவபாரதி! குறை பட்டுக் கொள்வது, யாருக்கும் எளிது. ஆசை இருக்



கும். அடுத்த விநாடியே அம்பாரி போட்ட யானை மீது, அமர்ந்து பவனி வர வேண்டும், பக்கத்திலே ஒரு இராஜகுமாரி உட்காரவேண்டும், அவள் கூந்தலில், பாரிஜாத மலரைச் செருகி மகிழவேண்டும், என்றெல்லாம். உடனே முடிகிற காரியமா! தோட்டமே கைக்கு வந்து கொஞ்சக்காலம்தானே ஆகிறது. திருத்தி, பாத்தி கட்டி, பயிரிட்டு, செடி முளைத்து ...செ! இதுகூடத் தெரியாமல், அரச மரத்தைச் சுற்றிக்கொண்டே, அடிவயிற்றைத் தடவிப்பார்க்கிற கதைபோலச், சுயராஜ்யம் வந்து என்ன பலன்? ஒன்றும் காணோமே! என்று மூக்கால் அழுவதா?"—என்று படபடத்துப் பேசினான், காவேரி. நவபாரதி, சில விநாடிகள் ஒன்றும் பதில் பேசவில்லை. ஒருவேளை, தனது அடுத்த வெளியீட்டுக்கு, காவேரியின் அந்தப் பேச்சை முன்னுரையாக்குவதா, முடிவுரையாக்குவதா என்று யோசனை செய்து கொண்டிருந்தானோ, என்னவோ!

ஒன்றுகூற மறந்துவிட்டேனே, நாங்கள் மூவரும் வேறு ஒரு காரியமாகக், கிராமம் சென்றிருந்தோம். அங்குதான் இந்த உரையாடல்.

நவபாரதி பதிலேதும் பேசாததால், காவேரிக்குத் துணிவு அதிகமாகி விட்டது, பிரிட்டிஷார் செய்துவிட்டுப் போன நாசம் கொஞ்ச நஞ்சமா? அந்த நாசத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்டைத் திருத்தி, நல்ல நிலைமையை ஏற்படுத்துவது எளிதான காரியமா? விரைவிலே முடிந்துவிடக் கூடிய காரியமா? வேரோடு கீழே சாய்ந்துவிட்ட பெருமரம் நம் கைபட்ட உடனே பூத்துக் காய்த்து, கனி குலுங்க வேண்டுமென்று சொல்வது போலல்லவா இருக்கிறது இவர்கள் கூற்று!" என்று காவேரி பேசினான்.

"நண்பருக்கு நான் ஒரு விஷயம் கவனப்படுத்தலாமா?" என்று நான் கேட்டேன். "ஒன்று என்ன! ஓராயிரம் சொல்லலாம்! என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது தெரியாதா எங்களுக்கு" என்று சற்றுக் காரமாகவே கூறினான் காவேரி.

தாராளமாகப் பேசலாம் என்று கூறினதால், நான், சற்று விரிவாகவே, விளக்கமளிக்கலானேன். "தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் வேலை, பாலைவனத்தைச் சோலைவனம் ஆக்குவது போன்ற மிக மிகக் கடுமையான வேலை என்று மக்கள் எண்ணி ஏமாறவேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சியினர் கருதுகிறார்கள்—பேசுகிறார்கள்." "புயலாலே பூந்தோட்டம் அழிந்தது; கிணற்றிலேயோ இடி விழுந்து தூர்ந்து போய்விட்டது. ஆறு, ஆறுவது கல்லில் இருக்கிறது, அங்கிருந்து வாய்க்கால் வெட்டிக் கொண்டு வருவதற்கோ, இடையில் ஒரு சிறு குன்று கிடக்கிறது, நான் அந்தக் குன்றைக் குடைந்து வாய்க்கால் அமைக்கலாமா; அதைச் சுற்றி வளைத்துக்கொண்டு வாய்க்கால் கொண்டு வருவதா என்பது பற்றி, நிபுணர்களைக் கேட்போமா அல்லது "நின்று தவமிருந்தாள்," கோயில் பூஜாரியிடம் யோசனை கேட்போமா என்று சிந்தித்தவண்ணம் இருக்கிறேன், சிரமப்படுகிறேன், நீயோ மல்லிகைப்பூ மாலை எங்கே, மருக்கொழுந்துக் கட்டு எங்கே, மனோரஞ்சித மலர் எங்கே? என்று கேட்டுத் தொல்லை தருகிறாயே என்று பேசும் தோரணையில், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு வெள்ளைக்காரன் நீங்கியபோது, பிணம் புதைக்கக் குழி வெட்டும் வேலையிலிருந்து இவர்கள் துவக்க வேண்டி வந்தது போலவும், அதற்குள் மக்கள் ஏதோ வீணாக அவசரப்பட்டு, ஆத்திரப்படுவது போலவும் கருதிக்கொண்டு, குறைபட்டுக் கொள்கிறார்கள்.

வெள்ளைக்காரன் இந்தியாவைச் சுரண்டினான்—மறுப்பாரில்லை; செல்வத்தைக் கொள்ளை கொண்டான்—மறைப்பாரில்லை; ஆனால், அவன் விட்டுச் சென்ற இந்தியா பாலை வனமுமல்ல-படுகுழி நிரம்பி, கள்ளி காளான் பூத்துக் கிடக்கும் கடுவெளியுமல்ல என்பதை மக்கள் அறிவார்கள்.

பெரும்போரிலே சிக்கிக் கொடுமைக்கும் குண்டு வீச்சுக்கும் இலக்காகி, எழில்மிகு நகரங்கள் மண் மேடுகளாயின; வளம்மிகு வயல்களெல்லாம் பிணக் காடுகளாயின; தொழிற்சாலைகளெல்லாம் குப்பை மேடுகளாயின; கடலே இரத்த மயமாயிற்று! குடும்பங்கள் இலட்சக் கணக்கிலே சிதறின! வாழ்வு சிதைந்தது! வீடிழந்து நாடிழந்து, எதிரியிடம் சிக்கிச் சீரழிந்து போன மக்கள் ஆயிரமாயிரம்! நடுநிசியில் விமானம் வரும்; நாசக் குண்டுகளை வீசும்; கட்டிலும் தொட்டிலுமே புதை குழியாகும்; கன்னல் மொழிக் குழவி கண்ணெதிரே கூழாகும்; மனம் குழம்பித் தாய் மடிவாள்; தகப்பனோ, மரமாகி நிற்பான், மனத்துயரால்!

கட்டிடங்கள் இடியும் சத்தமும், குண்டுகள் சீறிடும் சத்தமும், குலை நடுங்கி மக்கள் கூச்சலிடும் சத்தமும், நித்தியநாதமாக இருந்தது. தலைநகர்களை விட்டுச் சர்க்கார் ஓட்டமெடுப்பதும், உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் குழியில் இறங்கிக் குடும்பம் நடாத்துவதும், சர்வ சாதாரணமான சம்பவமாக இருந்தது.

நாமெல்லாம் மாண்டுபோனாலும், நாம் பெற்றெடுத்த செல்வங்கள், பிள்ளைக்கனி அமுதங்கள், இந்தப் பேசும் பொற்சித்திரங்கள் பிழைத்தால் போதும்; குண்டு வீச்சும், பிண நாற்றமும் பிடித்தாட்டும் இந்த நாட்டிலே, இந்த மொட்டுகள் இருந்து கருகவேண்டாம்; கண்காணாச் சீமை சென்றேனும் கண்மணிகள் வாழட்டும்; காலமும் நிலைமையும் மீண்டும் ஒன்று சேர்த்து வைத்தால் உச்சி மோந்து முத்தமிடுவோம்; அன்றி, இங்கேயே மடிய நேரிட்டாலும், நமது 'குலக்கொடி' அழிந்துபடவில்லை—எங்கோ ஓரிடத்தில், பேரும் புகையும், சச்சரவும் சாவும் தீண்டாத ஓர் திருநாட்டிலே, நமது உயிரோவியங்கள் வாழ்கின்றன—என்று மனத் திருப்தியுடன் மண்ணில் புதைபடுவோம்: மாணிக்கங்கள் தப்பினால் போதும்; இன்பப் பெருக்குகள் இந்தத் துன்ப பூமியிலிருந்து வேறிடம் சென்றால் போதும்—என்று எண்ணித், தலை வாரிப் பூ முடித்துக், கன்னத்தைத் துடைத்து முத்தமிட்டு, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'கண்ணே சென்றுவா! மணியே போய்வா! என் உயிரே, உன்னைப் பிரிகிறேன்! கர்த்தன் அருளால் மீண்டும் சேருவோம்!'—என்று தழதழத்த குரலில் கூறி, ஆயிரக் கணக்கான குழந்தைகளை, பிரிட்டனிலிருந்து, கனடாவுக்குக் கப்பலேற்றி அனுப்பி வைத்தனர்.

இவ்விதமான இடுக்கண்களும், பொருள் இழப்பும், உயிர் இழப்பும், கேட்போர் உள்ளத்தை உருக்கும் விதமான அளவிலும், வகையிலும் நடைபெற்று, நாடு பல நாசமாயின போரின் காரணமாக!

அன்று அலர்ந்த மலரைக் கண்டு திங்கள் பலவாயினவாம் ஒருவீரனுக்கு—களத்திலே கடும் போரிலே

அவன் நெடுங்காலமாக ஈடுபட்டிருந்த காரணத்தால்! ஓர் நாள் களத்திலே சிறிது ஓய்வு கிடைத்ததாம்; அது போது அவன், களத்தை விட்டுச் சிறிது தூரம் சென்று, அழிவுக்கு மத்தியிலே, எப்படியோ தப்பிப் பிழைத்த ஒரு மலரைக் கண்டு, மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, அதைப் பறிக்கச் சென்றானாம்! வேவு பார்த்துக்கொண்டிருந்த எதிரிப் படையினன் ஒருவன், மலர் பறிக்கும்போது, அவனைச் சுட்டுக் கொல்ல, கரத்தில் மலரும், மார்பில் இரத்தமுமாக அந்த வீரன் இறந்துபட்டானாம்!

கண்ணீர் கன்னத்தில் புரண்டோடச் செய்யும் காதைகள் பலப்பல, களம் தந்தது.

அத்தகைய கடும் போரிலே, சிக்கிச் சீரழிந்த நாடுகளெல்லாம், மீண்டும் வாழ்வு பெற்றுவிட்டன; அங்கெல்லாம், ஆளவந்த நாயகர்கள், எவ்வளவு அரும்பாடு பட்டிருந்தால், எத்துணைத் திறமையுடன் திட்டம் தீட்டி வெற்றி பெற்றிருந்தால், இவ்வளவு அழிவுக்குப் பிறகு அங்கு மக்களுக்கு வாழ்வு கிடைத்திருக்க இயலும் என்பதை எண்ணிப் பார்த்தால் போதும்—இங்கு ஏதோ மலையைக் குடை பிடித்து, மந்தையைக் காத்திடும் போக்கிலே பணி புரிவதாகப் பேசும் காங்கிரஸ் ஆளவந்தாரின் திறமை வெட்ட வெளிச்சமாகிவிடும்.

போர் நம்மைத் தீண்டவில்லை—நினைவில் இருக்கட்டும்! களம், இங்கு இல்லை—கவனமிருக்கட்டும்! நாசக் குண்டுகள், நமது நகர்களைப் பதம் பார்க்கவில்லை; எல்லாவற்றையும் சினிமாப் படத்திலேதான் பார்க்கிறோம்; இதழ்கள் மூலம் 'சேதி' தெரிகிறது.

அணுகுண்டு விழுந்த ஜப்பானும், பிணமலை குவிந்த ஜெர்மனியும், இரத்த ஆறு ஓடிய ரஷியாவும், இடிபாடு மயமான இங்கிலாந்தும், சீரழிந்த வேறு பல சிறு நாடுகளும், புயலுக்குப் பிறகு புள்ளினங்கள் கிளம்பிப் பண் இசைத்து, புதுக் கூடு கட்டிக்கொண்டு, பெடையுடனும் குஞ்சுகளுடனும் குதூகலமாக வாழ்வதுபோல, மீண்டும் வாழ்வின் ஒளியைப் பெற்றுவிட்டன!

போரே தீண்டாத இப்பொன்னாடு, ஓர் புனித ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது; மற்ற எந்த நாட்டுத் தலைவர்களுக்கும் கிட்டாத மதிப்பும் செல்வாக்கும், இங்கு காங்கிரஸ் தலைவர்களுக்குக் கிடைத்தது.

போரிலே பெரும் பணியாற்றி, அழிய இருந்த பிரிட்டனைக் காப்பாற்றி, ஹிட்லரை முறியடித்த பெருமைக்கு உரியவராக இருப்பினும், சர்ச்சிலை, வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிடும் துணிவு, பிரிட்டிஷ் ஜனநாயகத்துக்கு இருந்தது.

இங்கோ, கல்லை நிறுத்தினாலும், கட்டையைக் காட்டினாலும் காங்கிரஸ் என்றால் தட்டாமல் தயங்காமல், 'ஓட்' அளிக்கவேண்டும் என்றனர் தலைவர்கள்; ஆஹா! என்றனர்மக்கள். ஒரு நாட்டு மக்கள் இதைவிட விளக்கமாகக், கட்சிப் பற்றையும் தலைவர்களிடம் 'பக்தி'யையும் காட்டியிருக்க முடியாது.

இவ்வளவுக்குப் பிறகு, எதிர்ப்போர் எவரும் இன்றி, அழைத்த இடம் வருவதற்கு ஒருநாட்டு மக்கள் தயாராக இருந்த நிலையில், எதைச் சாதிக்க முடிந்தது? ஏன் வறுமையைத் துடைக்க முடியவில்லை? ஏன் மக்களின் வாட்டத்தைப் போக்க முடியவில்லை?

தேசபக்தரே! தேசோத்தாரகரே! தேசபந்துவே! தீனபந்துவே! ஜோதியே! சுடரே! முத்தே! மணியே! வாழவைப்போம் என்று வாக்களித்த பெம்மானே!

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவோ நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் . . .

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை . . .

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் : சென்னை-8

வாழ்வளிக்கும் திட்டம் எங்கே? சீரளிக்கும் சட்டம் எங்கே? என்று மக்கள் கேட்டால் சீறுகிறார்களே, நியாயமா?'' என்று நான் கேட்டேன்.

"இது தெரியும் இவர்களுக்கு, 'வளவள'வென்று பேச, காமராஜர்கூட, இதைச் சென்ற கிழமை கண்டித்துப் பேசினர்'' என்றார் காவேரி.

''ஆமாம்! மக்கள் நியாயம் கேட்டால், 'வளவள' வென்று பேசுவதுபோலத்தானய்யா, தோன்றும். இது எதேச்சாதிகாரிகளின் போக்கு. 'மள மள' வென்று காமராஜரால் பேசமுடியும்—பேசவேண்டியதும் அவ்வளவுதான், அவருக்கு! காங்கிரஸ் நல்ல கட்சி, மத்ததெல்லாம் மோசம். எங்களால்தான் ஆளமுடியும். மத்தது பிரயோஜனம் இல்லை. நன்மைகள் செய்கிறோம். அதற்காகத்தான் வரி போடுகிறோம். வரி அதிகம் கொடுத்தால் நன்மை அதிகம் செய்வோம்.''

இவ்வளவுதான், அவர் சரக்கு! இதைக் காட்டிவிட்டுக், கோணியைச் சுருட்டிக்கொண்டு அடுத்த ஊர் போய்க் கடை பரப்புவார். நாங்கள் அப்படி அல்லவே! ஆதியோடு அந்தமாக, விளக்கமாக மனதில் பதிகிறபடி பேசவேண்டும். அது உங்களுக்கு வளவளவென்றுதான் தோன்றும்'' என்று நான் சொன்னேன். நவபாரதி குறுக்கிட்டு. "பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பிறகு, இந்தியா எந்த நிலைமையில் இருந்தது என்பதுபற்றிக் காவேரி சொல்வது தவறு?'' என்று கேட்டார். "அதைக் கேட்டதற்குத்தான், ஒரு கதா காலட்சேபமே செய்துவிட்டாரே!'' என் று கேலி செய்தான் காவேரி. "திட்டவட்டமாகப் பேசவேண்டும்'' என்றான் நவபாரதி. "புள்ளி விவரப்படி'' என்று திருத்தமளித்தான் காவேரி. "புள்ளி விவரம் கேட்கிறீர்களே—எந்தப் புள்ளி விவரம்? உங்கள் சர்க்கார் தருகிற புள்ளி விவரம் போலவா!'' என்று, எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, 'உங்கள் சர்க்கார் தருகிற புள்ளி விவரம் மகா மட்டம் என்று, திட்டக் கமிஷன் உறுப்பினர், சீமான் நாராயணனே கண்டித்திருக்கிறாரே, தெரியுமா!! ஆனால், நான் அப்படிப்பட்ட புள்ளி விவரம் தரப் போவதில்லை; எ ல் லோ ரு ம் ஒப்புக்கொள்கிறதை மட்டுமே சொல்கிறேன்; வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டு வெளியேறுகிறபோது, தங்கமாகவும் ரொக்கமாகவும் நம்முடையது என் று இ ரு ந் த தொகை 1,179,74,00,000 ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பதினைந்தாண்டு ஆட்சி நடத்தி இருக்கிறீர்கள்—இப்போது நிலைமை என்ன தெரியுமல்லவா? **4971**—கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறோம். 1959-60-ல் கடனுக்காகச் செலுத்தும் வட்டித் தொகை 129-கோடி ரூபாய், 1960-61-ல், வட்டித் தொகை 143-கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதைக் கூடக் காவேரி மறுக்க முடியுமா?'' என்று கேட்டேன். நவபாரதி சிறிதளவு குறும்புத்தனமான பார்வையைக் காவேரியின் பக்கம் செலுத்தியபடி, "கடன் பளுவு அதிகம்தான்! மிகமிக அதிகம்! அதனால், வட்டி கட்டித் தீரவேண்டிய தொல்லை ஏற்படுவது மட்டுமல்ல, பணப் பெருக்கம் ஏற்பட்டு, விலைவாசி ஒரேடியாக ஏறி, மக்கள் மெத்தக் கஷ்டப்படுகிறார்கள்'' என்று கூறினர். "கடன் வாங்காமல் முன்னேற்றம் நடக்குமா?'' என்று, நம்பிக்கையுடன் கேட்டான் காவேரி. "எந்த முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறார் நண்பர்! சித்தரஞ்சனா சிந்திரியா?'' என்று நான் கேட்க, நவபாரதி, "சிந்திரியைக் குறிப்பிடமாட்டார், அதிலும் இப்போது!! காவேரி! அண்ணாதுரை நம்முடைய கட்சி அல்ல; அதனால் அவன் குத்திக் காட்டும்போது, நமக்குக் கோபம் வரத்தான் செய்யும்; ஆனால், கோபம் உண்மையைக் காணமுடியாத அளவுக்கு நம்முடைய கண்களை மறைக்கக்கூடாதல்லவா? எவ்வளவு வரிச்சுமை, கடன்பளு, இவைகளைத் தாங்கிக்கொண்டு, மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களிடம் சுரண்டிச், சிந்திரிபோன்ற பெரிய திட்டத்தை நடத்துகிறார்கள். அங்கு, இப்படிப்பட்ட அக்ரமம், கண்மூடித்தனமான நிர்வாகம் நடக்கலாமா? ஏன், அடுத்த தலைமுறைகூடக் கட்டித் தீரவேண்டிய அளவுக்குக் கடன் வாங்குகிறீர்கள் என்று யாராவது கேட்கும்போது, மார்தட்டிச் சொல்கிறோம், கடன் வாங்கிக் கடலிலா கரைக்கிறோம், கட்டித் தங்கம் வாங்கி நகைசெய்வதுபோல, விதைபோட்டுச் செடி வளர்ப்பதுபோல, இந்தப் பணத்தைப் போட்டு, நாட்டுக்குப் புதுச் செல்வம் தரக்கூடிய திட்டங்களைப் போடுகிறோம். அமைப்புகளை ஏற்படுத்துகிறோம், தொழில்களை அமைக்கிறோம் என்று பேசுகிறோம். பேசிவிட்டுச் சிந்திரியைக் காட்டுகிறோம். அங்கு நடைபெற்ற அக்ரமத்தை எப்படி மூடி மறைக்க முடியும்! எப்படிச் சகித்துக்கொள்வது? நீயேதான் சொல்லேன்'' என்று நவபாரதி கேட்டான். காவேரிக்குக் கோபத்தைவிடத் துக்கம்தான் அதிகம் என்பது தெரிந்தது. நான் என்ன செய்வேன் நிர்வாக ஊழலுக்கு என்று, பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்புபவன் அல்ல காவேரி! எங்கள்கட்சி! எங்கள் சர்க்கார்! என்று மகிழ்ச்சியுடன், பெருமையுடன், சில வேளைகளில், ஆணவத்துடன் கூடப் பேசும் போக்கினன். பாவம்! பற்று இருக்கத்தானே செய்யும்!! உரிமையும் இருக்கத்தானே இருக்கிறது! மந்திரி மாணிக்க வேலருக்கு, என் கட்சி! என் சர்க்கார்! என்று கூறிக்கொள்ளும், துடிப்பும், பற்றும், உரிமையும், நிலைமையும், இருக்கிறபோது, காவேரிக்கு இருக்கக்கூடாதா அந்த உரிமை. கைராட்டை காவேரியாயிற்றே! மாணிக்கவேலர் பூந்திதந்தவர் என்று பேசிக்கொள்கிறார்கள்!!

"பெரிய நிர்வாகத்திலே, சிறு சிறு தவறுகள் ஏற்பட்டுவிடுவதுதான். இதைப்போய்ப் பெரிதுபடுத்தலாமா?'' என்று சொல்லிப் பார்த்தான், காவேரி. "ஒன்று, இ ர ண் டா, பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள்ள. அடுக்கடுக்காக வெளி வந்தபடி இருக்கிறது, ஊழல், விரயம், நிர்வாகக் கோளாறு. சிந்திரி விஷயம் சாதாரணமானதா! உணவு உற்பத்தி பெருக்குவதுதான் திட்டத்தின் உயிர்நாடி என்கிறோம். உணவு உற்பத்தி பெருக, உரம் தேவை என்கிறோம். அந்த உரத் தொழில் நடக்கும் இடம் சிந்திரி. அங்கு மோசமான நிலைமை இருக்கவிடலாமா!! குழந்தைக்காக, பால் காய்ச்சி வைத்திருந்தேன், பாழாய்ப்போன பூனை உருட்டிவிட்டது என்று மனைவி சொன்னால்; சமாதானம் வருவதில்லையே, நம் மனதுக்கு. இது அப்படிக்கூட அல்லவே! பாலைப் பூனை குடித்துவிட்டது; என்ன செய்வது? இது தெ ரி யா ம ல், குழந்தை அழுகிறதே, கொஞ்சம்கூடப் புத்தியில்லாமல் என்று கூறிக்கொண்டே, குழந்தையை முதுகில் அறைந்து அது வீறிட்டு அழ ஆரம்பித்ததும், பாலைக் குடித்த பூனை 'மியாவ்' 'மியாவ்' என்று கத்துவதைக் காட்டி, பாப்பா! அழாதே! அதோ கேள், பூனை பாடுகிறது! அதைக் கேட்டுக்கொண்டே தூங்கு! கண்ணல்ல, தூங்கம்மா, தூங்கு!!— என்று தாய் பேசினால் எப்படி இருக்கும்? அப்படி இருக்கிறது ஒவ்வொரு, ஊழலைப்பற்றியும் சர்க்காரை நடத்துகிறவர்கள் சமாதானம் சொல்லும் போக்கு.''

இவ்வளவும், சர்க்காரின் சாதனைகளைக் குறித்து, வெளியீடுகளை அச்சிட்டு வழங்கும், நவபாரதம், பேசுகிறார். தம்பி! எனக்கு வேலையே, இருக்காதுபோலிருந்தது.

"காவேரிக்குக் கண்களில் கலக்கமே தெரிகிறது. நவபாரதம்! நீ ஏனப்பா இப்படி வாட்டி எடுக்கிறாய்?" என்று நான், குறுக்கிட்டுப் பேசவேண்டியதாயிற்று, போயேன்.

"சிந்திரியில் காவேரி!" என்று, சிறிதளவு அமைதியான முறையில் தொடங்கினான் நவபாரதம்; சிந்திரியில், திடீரென்று உர உற்பத்தி வேலை நின்றுவிட்டது. ஏனென்று கேட்டால், அப்படி ஆகிவிட்டது நிலைமை சீர்பட, என்கிறார்கள். சீர்கேடு ஏன் ஏற்பட்டது என்று கேட்டால், சிந்திரியில் இயந்திரங்களை ஓட்ட உபயோகப்படுத்தப்பட்ட நிலக்கரி, மட்டமானதாக இருந்ததால், பழுது ஏற்பட்டுவிட்டது என்று மத்திய அமைச்சர் சமாதானம் கூறுகிறார். நல்ல தரமான நிலக்கரி எஃகுத் தொழிற்சாலைக்குப் போய்விட்டதாம்; மிச்சம் இருந்த மட்ட ரகம் இங்கு வந்ததாம்! இப்படியா ஒரு மந்திரி பேசுவது. இதனால் ஏற்பட்டுவிட்ட நஷ்டத்துக்கு யார் பொறுப்பு ஏற்பது?" என்று கேட்டான்.

"எனக்கு ஒன்று தோன்றுகிறது, காவேரிக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ. இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டதால், இதற்குத் தங்கள், வருத்தத்தைத் தெரிவித்துப் பொதுமக்களுக்குத் தலைவணங்கும் முறையில், அந்தத் தொழிற்சாலையின் நிர்வாகத்திலிருக்கும் உயர்தர அதிகாரியும், தொழில் துறையை ஏற்றுக்கொண்டிருக்கும் மத்திய அமைச்சரும், தமது பதவிகளை இராஜிநாமாச் செய்வது, நல்லது; மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமையும், ஆனால்......" என்று நான் சொன்னேன்.

"இதற்கெல்லாம் இராஜிநாமா செய்வது என்றால், அமைப்புகள் நடக்காதே பெரிய பண மோசடியில் ஈடுபட்டதாகத் தெரிந்தால், இராஜிநாமாச் செய்யும்படி வற்புறுத்தலாம்" என்றான் காவேரி.

"உலக்கைக் கொழுந்து என்பார்களே, அப்படி இருக்கிறதப்பா உன் புத்தி—பண மோசடி ஏற்பட்டால், கையிலே விலங்கு பூட்டி உள்ளே அடைப்பார்கள்" என்று நவபாரதம் பதிலளித்தார்.

"நிர்வாகத்தில் எவ்வளவு சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது என்பதற்கு, வேறு எதையும்கூட ஆராயத் தேவையில்லை. 1958-59ல் சிந்திரியில், ஒரு கோடியே ஒன்பது இலட்சம் இலாபம் கிடைத்தது; அடுத்த வருஷத்திலேயே அந்த இலாபம், கிடுகிடுவெனச் சரிந்துவிட்டது. 1959–60ல் கிடைத்த இலாபம் 25 இலட்சம்! இது முறையா?" என்று கேட்டேன், காவேரி மனம் பதறி, "பாவிகள், இப்படி எல்லாம் தாறுமாறாக நடந்துகொண்டு பண்டித நேருவுக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கிறார்கள். மக்கள் வாழவேண்டும், அதற்கு என்ன திட்டம் போடலாம், என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாம் என்பதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார். அவரவர்கள் தங்கள் தங்கள் காரியத்தைச் சரிவரக் கவனித்துக் கொள்வார்கள் என்று நம்புகிறார். அவரை மோசம் செய்கிறார்கள்" என்று காவேரி பேசிடக் கேட்டு, எனக்கு உண்மையாகவே பரிதாபம் ஏற்பட்டது. தம்பி! காவேரிக்கு, ஏற்பட்ட அக்கறையைக் கவனித்தாயா? நேரு பண்டிதர் வரையிலாவது அப் பழுக்கற்றவர் என்று ஏற்படுத்திக் காட்டி, மனதுக்கு

ரேகைகளின் ஓட்டம்தான்
வாழ்க்கை ஓட்டம்—கை
ரேகைகளின் ஓசைதான்
வாழ்க்கைப் பாடல்!



நீங்களும்
பாடல் விளக்கம் பெறவேண்டாமா?

K. நடராஜ்
(கைரேகை நிபுணர்)
ஹோட்டல் ஸ்வாகத்
அறை எண்: 7 போன்: 82027

ஒரு ஆறுதல் தேடிக்கொள்ள முனைகிற வேடிக்கை புரிகிறதல்லவா!!

"காவேரி! நேரு பண்டிதர்மீது கண்டனம் தெரிவிக்கிறேன் என்று எண்ணிப் பதறாதே. அவர் கண் முன் நடைபெறும், ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள் ஆகியவற்றால், இந்த 14 ஆண்டுக் காலத்தில், எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய், நாசமாகி இருக்கிறது. ஆனால், அவர் துளியாவது பதறுகிறாரா! கண்டிக்கிறாரா! களைய முற்படுகிறாரா?

வேறு எவரேனும், இந்த ஊழல்களைக் கண்டித்தால் இவர்தானே வரிந்து கட்டிக்கொண்டு வருகிறார், பதில் அளிக்க, பழி துடைக்க, பாதுகாப்புத் தர! பிறகு, ஊழல் நிர்வாகம் நடத்துபவர்களுக்கு, அச்சம் ஏன் ஏற்படப் போகிறது! திருத்தவேண்டும் என்ற எண்ணம்தான் எப்படி உண்டாகும்!!" என்று கேட்டேன். காவேரி, வாய் திறக்கவில்லை. துக்கம் துளைக்கும் நிலைதான்! வேறெப்படி இருக்கமுடியும்?

"மற்றொன்று காவேரி! மக்களின் நல்வாழ்வுக்காகப் பண்டித நேரு அரும்பாடு படுகிறார் என்று நம்புகிறாய்—நம்பச் சொல்கிறாய். ஆனால், நிலைமை, வேறுவிதமாக அல்லவா இருக்கிறது. பதினான்கு ஆண்டு நேரு ஆட்சிக்குப் பிறகு, கிட்டத்தட்ட ஐயாயிரம் கோடி ரூபாய் கடன் பளு ஏறிய பிறகு, ஐயாயிரம் கோடி ரூபாய்க்குமேல் வரியாக மக்கள் கொட்டிக்கொடுத்த பிறகு, மக்களின் நிலைமை எப்படி இருக்கவேண்டும், திட்டம் வெற்றிபெற்று, பலன்கள் உருவாகக் கிடைத்து, அது மக்களிடம் பரவி இருந்தால், மரப் பொந்துகளிலே முட்டையிட்டு வைக்கும் வண்ணப் பறவைகள், குஞ்சுகள் வெளிவரும், கொஞ்சிக் குதூகலிக்கும் என்

றெண்ணியபடி, இரைதேடி வேறு இடங்களில் வட்டமிடும் வேளையாகப் பார்த்து, பாம்பு புகுந்து முட்டைகளை விழுங்கிவிடுமாம். அதுபோலன்றோ பலன்கள் கிடைக்கும், பாங்கான வாழ்வு பெறலாம் என்று மக்கள் எண்ணி ஆவலுடன் காத்திருக்கும்போது, அந்த நம்பிக்கையுடன் கல் பிளந்து, மலை பிளந்து, காடு திருத்திக் கழனியாக்கி, நெருப்பில் வெந்து பிலத்தில் நுழைந்து, உடலைக் கசக்கி இரத்தத்தை வியர்வையாக்கிப் பாடுபட்டான பிறகு, பலன் தங்களுக்குக் கிட்டாமல், பகற்கொள்ளைக்காரர்களுக்குச் செல்வதைக் காண்கிறார்கள். பறவைகளாவது, படபடவெனச் சிறகடித்துக் கிரீச்சென்று கத்தி, இங்குமங்கும் வட்டமிட்டுத், தமது கோபத்தைத் துக்கத்தைக் காட்டமுடிகிறது. காவேரி போன்ற உண்மைத் தொண்டர்களால், தமது மனதிலே ஏற்பட்ட கொந்தளிப்பை வெளியே கொட்டிக்கொண்டு ஒருவிதமான ஆறுதல் பெறக்கூட அல்லவா முடிவதில்லை!" என்று நான் கூறினேன். தம்பி! காவேரி, காங்கிரசை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டு, பிழைப்புக்கு வழி தேடிக் கொள்பவனல்ல. எனவே, அவனுக்கு உள்ளதை ஒரே அடியாக மறைக்க மனம் இடம்தரவில்லை; அதேபோது, கட்சிக்கு இழுக்கு ஏற்படுவது கண்டு சகித்துக்கொள்ளவும் முடியவில்லை, கலங்கினான்.

"ஆட்சியிலே பல கோளாறுகள் ஏற்பட்டுவிட்டன; அதனை நானும் ஒரே அடியாக மறுக்க முடியாது; மறுக்கக்கூடாது! ஆனால், காங்கிரஸ் கட்சியின் அந்த நாள் சாதனைகள், தியாகங்கள், இவைகளை அடியோடு மறந்துவிட முடியுமா! அந்த மதிப்பு மங்கி மடியவிட, அந்தக் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்ட எவருக்குத்தான் மனம் வரும்." என்று காவேரி பேசினான் — தனக்குத்தானே பேசிக்கொள்பவன்போல.

பொக்கை வாய்க் கிழவன் தனக்கு மீசை சுருள் சுருளாக இருந்தபோது, மயான காண்டத்தில் சுடலை காத்த காட்சியில் ஊர் உருகப் பாடிய கூத்து பற்றிக், கேட்போர் சலிக்கும் அளவு கூறிக்கொண்டிருப்பது போல, வறுமை கொட்டுவதால் துடித்துக் கிடக்கும் மக்களிடம் வீரதீரமாகச் சுயராஜ்யப் போர் நடாத்தியது பற்றிப் பன்னிப் பன்னிப் பேசினால், எப்படி இருக்கும்! அதுபோலப் பேசுவதுதான் காவேரிக்குத் தெரிகிறது. அது பொருத்தமுமில்லை, அதிலே பொருளும் இல்லை என்பது அவனுக்கு எங்கே புரிகிறது. ஆனாலும், தம்பி! எனக்குக் காவேரி அது போலப் பேசும்போது கோபம் பிறப்பதில்லை; ஏனெனில், காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டபோது, ஊராருக்கு இனிப்புப் பண்டம் வழங்கிய, 'உத்தமர்கள்' இன்று, காங்கிரசின் வீரத்தைப்பற்றி, தியாகத்தைப்பற்றி நீட்டி முழங்கிக்கொண்டிருப்பதை நித்த நித்தம் கேட்டுத் தொலைக்கிறேன்! அவர்கள் அல்லவா, மறுப்புரை கூறினால், சீறுகிறார்கள், சபிக்கிறார்கள்! காவேரிக்கு, இதைவிட அதிகமாக அல்லவா, மனவேதனை ஏற்படும். ஆனால், அவனுக்கு ஆத்திரம் அடிக்கடியும் வருவதில்லை; அதிக அளவிலும் ஏற்படுவதில்லை; வேறு சிலர் இருக்கிறார்கள் காங்கிரசாட்சியிலே உள்ள கேடுபாடுகளை எடுத்துச் சொன்ன உடனே, தீமிதித்தவர்போலாகிக் கொதிக்கிறார்கள், கொக்கரிக்கிறார்கள்.

சிறுவனாக இருந்தபோது, தம்பி! தெருக்கூத்துகள், நிறையப் பார்ப்பதுண்டு. இப்போது கூட மெத்த விருப்பம் எனக்கு, நள்ளிரவில் ஒலிபெருக்கியின் துணை தேடாமல், ஊர் முழுவதும் கேட்கத்தக்க முறையில் குரலெழுப்பி, நடத்தப்படும் தெருக்கூத்துக்களைக் காண்பதில். கிருஷ்ண வேடம் போடுபவன், அலங்கார நடை நடப்பான்; ஆர்ப்பரிப்பு இருக்காது; புன்னகைசெய்வான்; பற்களை நறநறவென்க் கடித்துக் காட்டமாட்டான்; குறும்புப் பார்வைதான் காட்டுவான், கொவ்வைபோலக் கண்களைச் சிவப்பாக்கியும், உருட்டி மிரட்டியும் கண்களைக் காட்டமாட்டான். நளினமான நடை இருக்கும். துரியோதனன், துச்சாதனன் போன்றவர்கள்தான், மண் கிளம்பும் அளவுக்குக் குதிப்பார்கள், இடமும் வலமும் சரசரவென்று சுழலுவார்கள், ஆர்ப்பாட்டமாக இருக்கும். ஒரு இரவு, வழக்கமான முறையிலே நடித்துக்கொண்டிருந்த, கிருஷ்ண வேடக்காரன், துச்சாதனனைவிட அதிக ஆர்ப்பாட்டமாக, குதிக்க ஆரம்பித்தான். எங்களுக்கு ஒரே வியப்பு! கண்ணன் இப்படி நடிக்கக் கூடாதே! போட்டுள்ள வேடத்தை மறந்துவிட்டானோ ஒரு சமயம், என்று எண்ணிக்கொண்டோம். அவனோ வலமும் இடமும் வேகமாக சுற்றுகிறான், தாளக்காரன் திகைக்கிறான் துரியோதனனே திடுக்கிட்டுப் போய், அசைவற்று நின்றுவிட்டான் போயேன் கண்ணன் ஆடிய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு.

மற்றவர்களைப்போல, இதைக்கண்டு வியப்படைவதுடன் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. கூத்து நடத்துபவர்களில், எனக்கு வேண்டியவர்களிடமே சென்று விசாரித்தேன், கண்ணன் இப்படி ஆடிடக் காரணம் என்ன? நடிப்பு இலக்கணமே பாழாகிவிட்டதே! ஒருசமயம், கதையையே, மறந்துவிட்டானோ!! —என்று கேட்டேன். இடி இடியெனச் சிரித்தபடி, விளக்கம் தந்தார்கள். விளக்கை நோக்கிப் பறந்து வந்த வண்டு, கண்ணன் போட்டுக்கொண்டிருந்த சட்டையிலிருந்த ஓட்டை வழியாக உள்ளே புகுந்துவிட்டது; நெளிந்து பார்த்தான், தானாக வண்டு கீழே விழும் என்று; இல்லை! மாறாக, வண்டு, முதுகுப்புறம் சென்றது. ஓடி ஆடிப் பார்த்தான், கீழே விழவில்லை; பொல்லாத வண்டு முதுகில் பலமாகக் கொட்டி விட்டது. சுரீல் என்று எரிச்சல்! கண்ணன் வேடமானால் என்ன, காகுத்தன் வேடமானால் என்ன, வண்டு கொட்டினால் வேதனைதானே! அந்த எரிச்சலால், வேதனையால், கண்ணன் வேடம் போட்டவன் அந்த ஆட்டம் ஆடினான், துரியனைத் தோற்கடிக்கும் அளவுக்கு!!

எப்போதோ பார்த்த இந்தக் கூத்துதான், எனக்கு இப்போதெல்லாம், காங்கிரசார் ஆர்ப்பாட்டம் செய்யும்போது நினைவிற்கு வருகிறது. நடிகனை வண்டு கொட்டி, ஆர்ப்பரிக்க வைத்ததுபோல, காங்கிரஸ் ஆட்சிக்குக் கிளம்பிய எதிர்ப்பு, சில காங்கிரசாருக்கு, சுரீல் என்று கொட்டும் வண்டுபோலாகி விடுகிறது; துடிக்கிறார்கள்; ஆர்ப்பரிக்கிறார்கள், கண்டபடி தூற்றியும் திரிகிறார்கள். பணபலம், பத்திரிக்கை விட்டுச்சென்ற அருள் பலம், ஆட்சிப் பொறுப்பு அளிக்கும் செல்வாக்குப் பலம், இவ்வளவு அரண்களையும் துளைத்துக்கொண்டு, எதிர்ப்புக் கொட்டுகிறது என்றால், அவர்களால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்! நான் கண்ட தெருக்கூத்து நடிகன்போலாகி விடுகிறார்கள்; கண்ணன் போலாகி விடுகிறார்கள்; கண்ணன் போல வேடம் இருப்பினும் துரியன்போல ஆர்ப்பரிக்கிறார்கள்.

தம்பி! இதை உன்னால் உணரமுடிந்தால், பிறகு, கொதித்து, குளறிப், பகை கக்கித் திரியும் காங்கிரசாரிடம் கோபம் அல்ல, இரக்கமே ஏற்படும்.

அண்ணன்,

அண்ணாதுரை

"பாவேந்தரின் கதைத் தலைவியர்"

"அன்னம்"

வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பாடும் வெற்று மனத் தெருப் பாடகனைப்போல், 'கண்டதைக் கவிதையாக்கி, மக்களைச் சுமக்க வைத்தவரல்லர் பாவேந்தர், மந்திரத்தில் மாங்காயை விழ வைப்பேன் என்று வீரம் பேசித் தந்திரத்தால் செய்து காட்டித் தாயத்து விற்கும் வித்தைக்காரனைப்போல், மயிரில் மலை தொங்கும் மதியற்ற கற்பனைகளால் மயக்கி வயிறு வளர்க்கும் பாலைவன வற்றல் மரமல்லர் பாவேந்தர். எழுத்தெல்லாம், எழுத்தின் கோடெல்லாம், எழுதும் வளைவெல்லாம் தமிழ்...தமிழ் என்றும், தன்மான உணர்வென்றும் ஒலிக்க வைத்த காலக் கவிஞன், கருத்துக் கனல் மூட்டி மூடக் காடழித்த கொள்கைக் கவிஞன் பாவேந்தர்.

கதையென்றால் மயக்குறும் மக்கள் கருத்தறிந்து காவியங்கள் படைத்து, கொள்கைகளைப் பாத்திரங்களாக்கி நடமாடவிட்டு, நாட்டிற்குத் தானளிக்க நினைத்த நல்ல சிந்தனைகளைத் திரட்டும் மருந்தைத் தேனிற் குழைத்துக் கொடுப்பது போல் கொடுத்த கொள்கை வள்ளலே புரட்சிக் கவிஞர்.

அவர் தந்த காவியங்கள் பல; அவர் கண்ட கதை மாந்தரும் பலர்; அவருள் அன்னம் என்னும் பெண்மயிலை, உரிமைக் குயிலெனத் தன் காவியச் சோலையில் பாவேந்தர் பாடவிட்ட பாங்கு படிப்போர்க்குச் சுவை கூட்டும்; உணர்வோர்க்கு உணர்வேற்றும்.

உள்ளத்தால் அவளொரு வெள்ளை அன்னம்; உருவால் அழகு மயில்; உணர்வால் உரிமைக்குயில்!! பாண்டியன் பரிசு எனும் காவியத் தலைவியாக அன்னத்தைப் படைத்த கவிவேழம், கன்னற் கவிதைகளால் தன் எண்ணத்தைக் காட்டுகிறார்.

கதிரைவேலன் கதிர் நாட்டு மன்னன்; மன்னனின் மனைவி கண்ணுக்கினியாள்; இவர்தம் காதற் சின்னம் அன்னம்.

"அணிமலர்ச் சோலை விட்டே
அரண்மனைக்குள் அடி வைத்தாள்"

என அன்னத்தை அறிமுகப்படுத்தும் நேரம் நாம் நினைந்து மகிழ்தற்குரியதாகும். அன்னம், அழகு மகளாக, ஆசைக் கிளியாக, காதற் கனியாகப் படைக்கப்பட்டிருப்பாளேயானால், மாலையில், மலர்ச் சோலையில் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பாள்; அரசியின் தாலாட்டுப் பாடலோடோ, அல்லது காதற் தவிப்புப் பாடலோடு நமக்கு முதன் முதலில் காட்டப்பட்டிருப்பாள். இழந்த உரிமையைப் பெறுதற்குப் போராட வேண்டிய புரட்சி மகளாக அல்லவா அன்னம் படைக்கப்பட்டிருக்கிறாள், எனவே, அதற்குரிய தகுதியோடு அறிமுகப் படுத்தப்படுகிறாள். எப்படி...?

வேழ நாட்டான் படை கோட்டை வாயிலில்; அப்படையின் தலைவன் கண்ணுக் கினியாளின் அண்ணன், அறிந்த அரசி, அன்னத்தின் தாய்.

புலவர் அரிமதி தென்னகன்

"என் அண்ணன்
இந்நாட்டில் நுழைவதாயின்
என் உயிரில் நுழைந்ததன்
பின் நுழைக"

—என்று வஞ்சினம் கூறி, அண்ணன் உயிர் குடிக்க ஓடுகிறாள். மனைவி சென்ற பிறகு மன்னன் கதிரைவேலன்,

"தனல் சிந்தும்
விழியாலே நாற்புறத்தும்
தமிழ் மறவர் தமைஏவித்
தெற்குக் கோட்டை
மணிவாயில் தனையடைந்தான்
சிங்கத்தைப் போல்"

எத்துணை பரபரப்பான சூழ்நிலை, எத்துணை அச்சம் கலந்த நேரம். ஒரு வீரமகளை இத்தகைய நேரத்தில்தானே அறிமுகப்படுத்த வேண்டும்!! பாவேந்தர் அதை உணர்ந்தே இதைச் செய்தார் என்றால் மறுப்பாருண்டா?

பகைப்படை வந்தது என்றவுடன் அன்னத்தின் தாயே முதலில் கோட்டையைக் காக்கச் செல்லுகிறாள்; பின்னரே மன்னன் செல்லுகிறான் என்று பாவேந்தர் காட்டுவது தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி எண்பதடி பாயும் என்பதைக் குறிப்பால் உணர்த்தவே என்பதையும் நாம் ஈண்டு இணைத்தே எண்ணல் வேண்டும்.

'அணிமலர்ச் சோலை விட்டே அரண்மனைக்குள் அடி வைத்த' அன்னம், இருந்த நிலையை உணர்ந்தாள்; ஏனென்று கேட்டு, ஆத்தாக் கிழவி சொல்ல காரணத்தைத் தெரிந்து கொண்டாள்.

போர் நடக்கிறது. வேழ நாட்டு படைத் தலைவன் நரிக்கண்ணன், கதிரைவேலனைக் கொன்று தங்கையை விதவையாக்குகிறான். பின் தங்கை கண்ணுக் கினியாளையும் வஞ்சனையால் கொல்லுகிறான். தங்கை மகள் அன்னத்தின் ஆவி பறிக்கத் தேடுகிறான். ஆனால், ஆத்தாக் கிழவியென்னும் அருந்துணையோடு அன்னம் தப்புகிறாள். அன்னம் தப்பினாள் என்பதைவிட ஆத்தாக் கிழவி தப்பவைத்தாள் என்பதே சரியாகும்.

கோட்டையின் வாயிற்புரம் கொலைக்களமாவதைக் காண்கிறாள் அன்னம். அப்போது,

"கிளியுதடு கனல்சிந்தும்;
துடிக்கும்; அஞ்சும்
வாட்போரை விரும்பும்
அவள் தமிழ நெஞ்சம்!
வகையறியா அவள் இளமை
மறுத்து நிற்கும்"

என்கிறார் பாவேந்தர்.

ஆத்தாக்கிழவி சொல்வதுபோல் அன்னம் இறகு முளைக்காத அன்னம் போன்றவள். எனவே கொடுமை கண்டு துடிக்கிறாள்; கொடுமை கண்டு அஞ்சுகிறாள்; அழிவைத் தடுக்க அவளால் எழ முடியவில்லை. ஏன்...? 'வகையறியா அவள் இளமைதான்.' என்றாலும்

சிறப்புக் கட்டுரை!

அவள் உதடு கனலைச் சிந்துகிறது; ஆனாலும் உள்ளம் அஞ்சுகிறது. அவ்வளவுதானா அன்னம்? நாட்டிற்குள் பகை என்றவுடன் 'நான் முந்தி' என்று களம் சென்ற கண்ணுக்கினியாளின் மகளா அன்னம் என்று எண்ணத் தோன்றலாம், பாவேந்தர் அவ்வாறு தன் கதைத் தலைவியைப் படைப்பாரா?

பெண்மைக்கே உரிய அச்சம், மடம், நாணம் எனும் பண்புகளைக் கொண்ட அன்னம் 'வாட்போரை விரும்புகிறாள்' என்று காட்டுகிறார். 'வகையறியா அவள் இளமை மறுத்து நிற்க' வாட்போரை விரும்புவதெப்படி என்னும் வினாவிற்குப் பாவேந்தர் விடுத்த விடை அவள் நெஞ்சம் 'தமிழ நெஞ்சம்' என்பதுதான். ஆம்! தமிழிருக்கும் நெஞ்சம், தமிழ் வாழும் உள்ளம், தமிழ் வளரும் மனம் கொடுமை கண்டு கொதிக்கும்; மடமை கண்டு வெடிக்கும்; தன்னால் முடியாதெனினும் தருமம் காக்கத் துடிக்கும் என்பதை அன்னத்தை அறிமுகப்படுத்தும் முதற் கட்டத்திலேயே உலகிற்குக் காட்டுகிறார் கவிவேந்தர்.

தப்பிச் சென்ற ஆத்தாவும் அன்னமும் புல்லூர் சென்றனர். அங்கேதான்,

"அருமைமகள் தனக்கேற்ற
அன்பனோடும்
ஆணிப்பொன் கட்டில்எனும்
சேற்றி னுள்ளே
எருமையெனக் கிடந்தின்பம்
நுகருகின்ற
எழில்நாளை நான்காணப்
பெறேனோ"

—என்று கனவு கண்ட கண்ணுக்கினியாளின் அன்பு மகள் அன்னம் ஓர் உண்மையை அறிந்தாள்.

தனக்கே கதிர் நாடு உரிமை என்பதற்கு ஆதாரமான 'முழு நீளப் பட்டயமும், உடை பூண் வாளும் மூடிய பெட்டி' நரிக்கண்ணன்பால் அகப்பட்டுக் கொண்டதை அறிந்துகொண்ட அன்னத்திற்கு, அப்பேழை பாண்டிய மன்னனால் அளிக்கப்பட்டது என்பதையும் ஆத்தாக் கிழவி கூறினாள். அது மட்டுமா சொன்னாள்? 'அன்னமே! அருந்தமிழ் கனியே! நீ இனி தனியே; அன்னையை உன் அம்மான் கொன்றான். உன் தந்தையும் கொல்லப்பட்டான் என்றும் சொல்லுகிறாள். கல்விக் கண்ணளித்த தந்தையை எண்ணிக் கண்ணீர் விடுகிறாள்!

ஒப்புரைக்க முடியாத
அன்னை, என்னை
ஒருக்கணித்து, மார்பணைத்து,
மேனியெல்லாம்
கைப்புறத்தில் ஆம்படிக்குத்
தழுவி என்றன்
கண்மறைக்கும் சுரிகுழலை
மேலொதுக்கி
மைப்புருவ விழிமீது
விழிய மைத்து
மலர்வாயால் குளிர்தமிழால்
கண்ணே என்று
செப்பிமுத்த மிட்டாளே,
அன்புள் ளாளின்
செந்தாமரை முகத்தை
மறப்பேனோ நான்"

—என்று அன்னையை நினைத்துப் புலம்புகிறாள்.

ஒரு தாய் தன் மழலைக்கு எவ்வாறு பாலூட்டுவாள் என்பதை தாய்மை ஓவியமாகத் தமிழ்க் கவிஞன் தந்துள்ளதை அன்னைப் பால் உண்டவர்கள்—அமுல் பால் உண்டவர்கள் அல்லர்—அறிவார்கள். அல்லது, எதையோ பார்ப்பதுபோல், இல்லாள் பாலூட்டுவதைக் கண்டவர்களும் அறிவார்கள்.

புகை நுழையா இடத்திலும் புல்லன் நுழைவான் என்னும் புதுமொழிக் கேற்ப புல்லூர்க்கும் நரிக்கண்ணனின் நச்சுப் படை வருகிறது. அன்னமும் ஆத்தாவும் ஆணுடையில் வெளியேறி சீனிக் கணக்காயர் என்னும் ஆசிரியர் வீட்டிற்குச் செல்லும் அதே வேளையில், ஆத்தாக் கிழவின் மகன் வேலன் நரிக்கண்ணன் படைகளை நடுங்க வைக்கிறான்.

தப்பி வரும்போது அன்னம் ஆத்தாவைநோக்கி, "உன் மகனின் நிலையென்ன?" இப்படி அவரை மட்டும் விட்டு விட்டு செல்லுகிறோமே என்கிறாள். அதற்கு ஆத்தாக் கிழவி, "ஊர் மீட்கச் சாகட்டும்" என்கிறாள். "முடங்கிக்க ஒரு சாண் இடம்; வயிற்றிற்கு ஓர் உருண்டை சோறு; ஒரு முழத் துணி; நாடாவது மண்ணாவது? எவன் எப்படிப் போனால் என்னய்யா; இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?" என்று பேசும், இதயத்தையும் இரைப்பையாகக் கொண்டவர்களைத் திருத்த எத்தனை ஆத்தாக் கிழவிகள் வேண்டும் என்பதை உணர்ந்தவர்களுக்குத்தான். 'ஊர் மீட்கச் சாகட்டும்' என்ற வரியில் பொதிந்து கிடக்கும் உண்மை புரியும்!

ஆத்தாவும், அன்னமும் வேழ நாட்டு வேந்தனின் பாதுகாப்பில் இருக்க நரிக்கண்ணன் வருகிறான். எலி மனத்தான் ஏது மறியேன் என்று நாடகமாடுகிறான். அப்போது,

தன் அத்தை மகளை
இவள் மணந்து கொண்டு
தானாள்க இந்நாட்டைப்
பின் நாள்"

—என்று நரிக்கண்ணன் தன் பெயருக்கேற்ப தகிடுதத்தம் செய்கிறான். அன்னமோ,

"தென்பாண்டி நாட்டான்பால்
என் மூதாதை
சிறைச்சோழனை வென்று,
பெற்ற தான
என்பாண்டியன் பரிசை
எனக் களிப்போன்
எவனெனினும் அவனுக்கே
உரியோள் ஆவேன்"

—என்று வேழ நாட்டு வேந்தனுக்கு வேண்டுகோள் விடுக்க, அவனும் நரிக்கண்ணனுக்கு அவ்வாறே செய்க என ஆணையிடுகிறான்.

ஒப்புக்கொண்ட நரிக்கண்ணன் உள்ளுக்குள் திட்ட மிடுகிறான். நாவில் தேன் சொட்ட, அன்னத்தின் நலத்தில் நாட்டம் உள்ளவன் போல் கிழவன் பாண்டியன் பரிசை கொணர்ந்தால் என்ன செய்வாய்? நோயாளியாய் இருந்தால் என்ன செய்வாய்? குழந்தையாய் இருந்தால் கொடுமையன்றோ? ஏழையாய் இருந்தால் ஏற்குமோ உலகம்? கோழையாய் இருந்தால் ஏற்றுக்கொள்ளுமோ உள்ளம்? என்றெல்லாம் பேசி ஏய்க்க நினைக்கிறான். அப்போது, "அன்னமே! இகழ் சாதிக்காரன் எடுத்துவரின் அவனுக்குன்னைக் கொடுத்திடல் பாவமன்றோ?" என்று சாதியைக் காட்டி மிரட்டுகிறான், அன்னமோ, ஒரே ஒரு வரியில் "இவ்வுலகில் எல்லாரும் நிகரே" என்கிறாள். பாவேந்தர், தன் கதைத் தலைவி அன்னத்தைப் பேசவைக்கும்போதெல்லாம் கொள்கைக் குலக் கொடியாகப் படைத்திருப்பது பகுத்தறிவாளர்க்குப் பழம்போல் இனிப்பதாகும்.

ஒருநாள் அன்னமும், தோழி நீலியும் படகில் பயணம் செய்யும்போது காற்றும் மழையும் கலந்தடிக்க, ஆற்றில் படகு அலைபட்ட துரும்பானது. அப்போது, ஆத்தாக் கிழவியின் மகனும்,

"கிளிக்கழுத்தின் பொன்வரி
போல் அரும்பும் மீசை
கீழ்க்கடலின் மாலைவெயில்
கலந்த நீல
ஒளிந்திரைபோல் தலைமயிர்சிங்
கத்தின் தோற்றம்!
உயிர்ப்பரிதி வான்போன்ற
மேனிவாய்ந்தா"னு
மாகிய

வேலன் இருவரையும் காப்பாற்றுகிறான்.

அன்றொரு நாள் காத்தவரும், ஆற்றிலினிலே காத்தவருமாகிய ஆத்தாக் கிழவன் மகனென்று அறிந்த அன்னம், அவனிடம் தன் நிலையினையும், உறுதியினையும், கூறுகிறாள். வேலன், பாண்டியன் பரிசைக் கொண்டு வருவேன் எனக் கூறிப் பிரிகிறான்.

அனைவரும் பாண்டியன் பரிசைத் தேட, அன்னமும் குதிரையேறிப் பேழைபற்றிப் புலனேதும் கிடைக்காதா என்று எங்கும் தேடி அலைந்தாள். ஆனால் பலனொன்றும் கண்டாளில்லை. எனினும், வேங்கையனைய வேலன் பரிசைக் கொண்டு வருவானென்று நம்புகிறாள். 'அவன் கண்ணில் காதலின் சின்னமே' இல்லா நிலையினை எண்ணி வியப்படைவதாகக் காட்டும் பாவேந்தர் அன்னத்தின் உள்ளம் அவனை நாடுகிறது என்பதைக் கண்ணுக்குத் தெரியாத மெல்லிய கோடுபோல் குறிப்பாகக் காட்டுகிறார். அன்னம் வேலனைக் காதலிப்பதாகக் காட்டுவது' பாண்டியன் பரிசைக் கொண்டு வருவோர்க்கே என்னைத் தருவேன்' என்று உறுதியேற்ற அன்னத்தைக் களங்கப்படுத்துவதாகும் என்பதைப் பாவேந்தர் உணர்ந்திட்ட காரணத்தால், இருவரையும் சந்திக்க வைக்கும் நேரத்தில் எல்லாம் மிகவும் எச்சரிக்கையோடு சொற்களைக் கையாண்டுள்ளார்.

வேலனை நினைத்திருந்த அன்னத்தின் விழிகளைத் துயில் வந்து கௌவிக் கொள்கிறது. அப்போது துறவி வேடத்தில் வந்த ஆத்தாக் கிழவியின் கணவன் அன்னத்தை விழிக்கச் செய்து 'அருங்கிளியே! உனக்கான ஆடவன்பால், பாண்டியன் பரிசு பற்றிக் கூறுகிறேன்; அவனை......உன் அன்புக்குரியனை என்பால்அனுப்புக' என்றுசொல்ல, அன்னம் வேலனைத் தேடி விரைகிறாள்.

அரண்மனைக்குள் சென்ற அன்னம் வேலனைக் கண்டாள்; நீலி எனும் தோழியிடம் துறவியை ஈங்கழைத்து வா என்றாள். துறவி அரண்மனையடைந்து வேலனிடம் 'பாண்டியன் பரிசு' பதுக்கப்பட்டுள்ள இடத்தைக் கூறுகிறான். நரிக்கண்ணனிடமிருந்து பாண்டியன் பரிசை தந்திரத்தால் பெற்று பதுக்கிவைத்தவனே அந்தத் துறவி தான்.

அதே வேளையில் நீலன் என்பவன் அரண்மனை வந்து நரிக்கண்ணனும், அவன் படைகளும் பூதங்களாக உருமாற்றி வருகின்றார்கள் என்று அன்னம் முதலாக அனைவரிடம் கூறுகிறான். பொய்மைப் பூதமாகிய நரிக்கண்ணன் போலிப் பூதமாக வர, வாளோடு இருந்த அன்னம், பனைமரத்திலிருந்து காய் விழுவதுபோல அவன் தலையை வெட்டி வீழ்த்திப் பழி வாங்குகிறாள்!! அன்னம் வீர மகளாகிறாள்; தன் பெற்றோரின் பகையழித்த வெற்றி மகளாகிறாள். தென்றல் பெருத்தால் புயலாதல் போல பெண்மை சீறின் பெரும் புயலாகும் என்னும் உண்மையைப் பாவேந்தர் தான்படைத்த கதைத் தலைவியின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

பின்னர், வேலன் பாண்டியன் பரிசிருக்கும் பேழையோடு அன்னத்தைக் காண வருகிறான். அன்னம் படுத்திருந்த இடம் இரத்தச் சேறாகக் காணப்படுகிறது; அன்னமோ அங்கில்லை. வேலன் துடிக்கிறான்; விழிகள் நீர் பெருக்கி, அன்னத்தின் உடல் தேடி அலைகிறான். புன்னை மரத்தின் கீழ் புதைமேடு கண்டு புலம்புகிறான் அப்போது அன்னம் உயிரோடு அவன் எதிரே நிற்கின்றாள். 'அன்னமே! உன் பரிசு இது; பெறுக! என்றான் வேலன். பாண்டியன் பரிசிருக்கும் பேழையைக் கண்ட அன்னம்,

"முகம்தாழ்த்திக் கால்விரலால்,
தரையைக் கீறி
முடிந்ததுசூள்; கடிமணந்தான்
மிச்சம்"

என்றாள். பகை முடிக்கும் வரை அரிமா என்றிருந்த அன்னம் சூளுரை முடிந்தவுடன் 'தலை குனிந்து, நிலம் கீறும்' தமிழ் மகளாகிவிடுகிறாள்.

வேழநாட்டு மன்னன் அன்னத்தையும் வேலனையும் மணமக்களாக்கி மணிமுடியும் சூட்டுகிறான். எல்லோரும் வாழ்த்துகின்றனர்.

குயிலாக இருந்தவளைக் கொடும் புலியாக்கி, மயிலாக இருந்தவளை மதயானையாக்கி, அன்னமென இருந்தவளை அரிமாவாக்கிக் காட்டிய பாவேந்தர். நாட்டின் பகையழிக்க நங்கையரும் வரவேண்டும் என்னும் புதுமைக் கருத்தைப் புரட்சி நோக்கை நாமறிய உணர்த்தினார்.

ஆம்! அழிக்கப்பட வேண்டியனவற்றை அழிக்க, காக்கப்பட வேண்டியனவற்றைக் காக்க, பெறப்பட வேண்டியனவற்றைப் பெற ஆயிரமாயிரம் அன்னங்கள் அணிவகுக்கும் நாள் எந்நாள்? அந்நாள் வருக! அன்னைத் தமிழ் நலம் பெறுக!!

★

21—5-72 முதல்
புலவர் அரிமதி தென்னகன்
எழுதும்
காவியக் கனல்
எனும் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரை
தொடர்ந்து வெளிவரும்.



விற்பனையில் உள்ளது!

"அண்ணாவின் சொற்களஞ்சியம்"

முக்கனிச் சுவையளிக்கும் முத்தமிழ்ப் பெருமையினை அண்ணாவின் சொல் நமக்களிக்கும். பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாடு, கலைவாணர் சிலை திறப்பு விழா, மாணவர் வெள்ளி விழா, சீரணி துவக்க விழா ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆற்றிய பேருரைகளின் தொகுப்பாக வெளியாகி விற்பனையாகிக் கொண்டிருக்கும் "அண்ணாவின் சொற்களஞ்சியம்" வேண்டுவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்க.

முகவரி:

திருமதி சாந்தா பாபு,
11/7, முத்து கிராமணித் தெரு,
மயிலை, :: சென்னை-4.

விலை ரூ. 1-50

ஆசிரியர் வெளியிடுவோர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-8
84. திருக்கச்சிநம்பித் தெரு, அன்னை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.